# நூலக உலகம்

காலாண்டு இதழ்

ஜனவரி, 2022 | இதழ்–01 | விலை: ரூ.100

வாழைச்சேனை பொதுசன நூலகத்தின் வெளியீடு






## பொன்விழா ஆண்டில்
## வாழைச்சேனை பொதுசன நூலகம்
## (1972-2022)










# நூலக உலகம்

*"நமது ஆற்றல்களை வெளிப்படுத்தும் நமக்கான உலகம்"*

**ஜனவரி- 2022**

**பிரதம நிருவாகி:**

**திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் – தவிசாளர்**
கோறளைப்பற்று பிரதேச சபை, வாழைச்சேனை.

**பிரதம ஆலோசகர்:**

**திரு.ச.நவநீதன் – செயலாளர்**
கோறளைப்பற்று பிரதேச சபை, வாழைச்சேனை.

**இதழாக்க ஆலோசனைக் குழு:**

**அப்துல்லா ஹாரூன்**
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்,
கோறளைப்பற்று பிரதேச சபை, வாழைச்சேனை.

**எஸ்.ஜெயரூபன்**
நிதி உதவியாளர்,
கோறளைப்பற்று பிரதேச சபை, வாழைச்சேனை.

**திருமதி. ஹப்சா மஜீத்**
நூலகர், பொது நூலகம், வாழைச்சேனை.

**இதழாசிரியர், இதழ் வடிவமைப்பு:**

**அ.ஶ்ரீதர்,**
நூலக சேவகர், பொது நூலகம், வாழைச்சேனை.


**இதழ் வெளியீட்டுக் குழு:**

**திருமதி. தாரணி தங்கத்துரை**
**திருமதி. செ.சிவனேஸ்வரி**
**திருமதி. சபீக்கா கலீம்**
**திருமதி. அவ்வா உம்மா**
**திரு. வை.கோணேஸ்வரன்**
**திருமதி. ஏ. ஆயிஷா**

**இதழ் தொடர்பான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் உங்கள் படைப்புக்களையும் அனுப்ப வேண்டிய**

**முகவரி:**


ஆசிரியர், நூலக உலகம்
பொதுசன நூலகம், வாழைச்சேனை.
தொடர்புகளுக்கு: 075 1314540
sasridhar@ymail.com


"அனைத்தும் ஆகி அன்பாகி
அமைபவன் அவனே அவன்தாளில்
உனதுளம் ஆன்மா உடல் எல்லாம்
உடனே தருக என் நண்பா
இவைகள் யாவும் உன்முன்னே
இருக்கும் அவனின் வடிவங்கள்
இவைகளை விடுத்து வேறெங்கே
இறைவனைத் தேடுகின்றாய் நீ
மனத்தில் வேற்றுமை இல்லாமல்
மண்ணுல கதனில் இருக்கின்ற
அனைத்தையும் நேசித் திடும் ஒருவன்
ஆண்டவனை அவனைத்
தொழுபவனாம்.."

சுவாமி விவேகானந்தர்

## உன்னத பயணத்தின் முதலடியில் நின்று கொண்டு...

சமூக மாற்றத்திற்கும் ஏற்றத்திற்கும் முதலடியாய் விளங்குபவை கலை, இலக்கியங்கள்.தமிழ்ச் சமுதாய வளர்ச்சியில் கலை, இலக்கியத்தின் பங்கானது அளப்பரியது. நமது பண்டைய வரலாற்று பதிவுகளாக நமக்கு இன்று எஞ்சியிருப்பவை பெருமளவில் இலக்கியங்கள் மட்டுமே! இலக்கியமும் அவற்றில் இடம்பெறுகின்ற புல மாந்தர்களும் நம் வீடுகள் வரை இன்றும் இடம் பிடித்துள்ளனர்.

கால ஓட்டத்தில் தற்கால ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் தமிழ்ச் சமூகத்தின் இருப்பு என்பது கேள்விக்குட்படுத்தப்படும் நிலையில், நாம் புரிகின்ற பணிசார்ந்து ஒரு விடயம் நமது முயற்சி போதாமையால் அது இதுவரை செயல்வடிவம் பெறாமலே இருந்து வருகின்றது அது என்னவெனில் 'ஆவணப்படுத்தல்'. நூலகங்களைப் பொறுத்தவரை ஆவணப்படுத்தல் என்பது நூல்களோடு மாத்திரம் நின்றுவிடுவதல்ல! சமகாலத்தில் நமது ஆவணப்படுத்தல் குறைபாடுகளால் சமூகத்தில் நாம் எதிர் கொள்கின்ற சவால்கள் ஏராளம்! புத்தகங்கள் மட்டும் அல்லாது, நாம் சாதாரணமாக கருதும் துண்டுப்பிரசுரங்கள் வரை அனைத்தையுமே ஆவணப்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

பொன் விழாக் காணும் நமது பொதுநூலகத்தின் வரலாற்றினைச் சிறப்பிக்கும் வண்ணம், முதல் நிகழ்வாக இந்த 'சிற்றேடு' வெளியீடு இடம்பெறுகிறது. இதனைத் தொடர்ந்து பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு திட்டமிட்டு உள்ளோம். இதழ் வெளியீடு மற்றும் நூல் வெளியீட்டுப் பணிகளுக்கென, வாழைச்சேனை பொதுசன நூலகத்தில் வெளியீட்டுப் பிரிவு ஒன்றினை உருவாக்கும் நோக்கில் கடந்த 2020ஆம் வருடம், நூலகத்திற்கு கணினி, போட்டோ பிரதி இயந்திரம் போன்றவை சபையின் கௌரவ தவிசாளரின் நிதி ஒதுக்கீட்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட போதும், கொரோனா சூழலில் திட்டமிட்ட பணிகள் எதனையும் இலகுவில் நடைமுறைப் படுத்த முடியாமல் போனது!

50ஆவது வருடத்தில் அவற்றினை கட்டாயம் செயல்படுத்தியே ஆகவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது! எங்களது முயற்சிகளுக்கு ஆதரவு தாருங்கள்! படியுங்கள்! படையுங்கள்! சேர்ந்து பயணிப்போம்! அறிவுமிக்கதொரு சமுதாயத்தினை உருவாக்க அனைவரும் சேர்ந்து உழைப்போம்!...

**அன்புடன் – எஸ்.ஏ.ஶ்ரீதர்**




# 50ஆவது ஆண்டில் வாழைச்சேனை பொதுசன நூலகம்!

**கோ**றளைப்பற்று பிரதேச சபையின் கீழ் இயங்கி வருகின்ற பொது நூலகங்களுள் பிரதானமானது வாழைச்சேனை பொதுசன நூலகமாகும். பிரதேச சபை, கிராம சபையாக இயங்கிய காலம் முதலே கிராம சபைக் கட்டிடத்தின் ஒரு அறையில் வாசிகசாலையாக இயங்கி வந்துள்ளது. அலுவலக உத்தியோகத்தர்களே இதன் பொறுப்பாளர்களாக இருந்து நடத்தி வந்துள்ளனர். தற்போது வாழைச்சேனை மக்கள் வங்கி அமையப்பெற்றுள்ள இடத்தின் முன்னால் உள்ள சந்தைப் பகுதியில் தான் அப்போதைய கிராம சபை – பிரதேச சபை கட்டிடம் அமைந்திருந்தது. அங்கு நடத்தப்பட்டு வந்த வாசிகசாலையில் இரவல் வழங்கும் சேவைகளும் நடத்தப்பட்டு வந்ததாகவும், தான் க.பொ.த. சாதாரணதரம் கற்கின்ற காலங்களில் அங்கு நூல்கள் இரவல் பெற்று படித்து வந்ததாகவும், எமது பொதுசன நூலகத்தின் மூத்த வாசகி ஒருவர் தெரிவித்தார். அதுமட்டுமன்றி, இதற்கு முன்னர் வாழைச்சேனை விபுலானந்தர் வீதியில், விபுலானந்தர் சிலை அமைந்துள்ள காணியில், 1965 காலப் பகுதியிலேயே வாசிகசாலை ஒன்று சிறப்பாக இயங்கி வந்ததாகவும், அங்கு தாம் பத்திரிகைகள், நூல்கள் வாசித்துள்ளதாகவும் அண்மையில் எழுத்தாளர். திரு.அஜந்தா ஞானமுத்து அவர்களுடன் உரையாடிய வேளையில் தெரிவித்தார்.

ஆனால், பொதுநூலகம் எனும் நாமத்துடன், பிரத்தியேக கட்டிடத்துடன் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட திகதியே 01-07-1972 என்பதனால் அதனையே நூலகத்தின் உத்தியோக பூர்வ தொடக்க தினமாகக் கொண்டு, இவ்வருடம் ஜூலை-01ஆம் திகதியுடன் நூலகம் ஆரம்பிக்கப்பட்டு 50 வருடங்கள் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



50ஆவது வருடத்தில் காலடி பதித்துள்ள நிலையில், இப்போதுவரை இந்நூலகம் தரம்-IIIஆம் நிலையிலேயே உள்ளது சமூக அவலம்! சமூக அவலம் எனும்போது பணிபுரிகின்ற உத்தியோகத்தர்கள் முதல்! சுற்றியுள்ள குடியிருப்பாளர்கள் வரை நமது சமூகத்தின் குறை பாடாகவே எண்ண வேண்டியுள்ளது. இருப்பினும், கடந்த காலங்களில் ஏற்பட்ட உள்நாட்டு இன வன்செயல்கள் மாத்திரம் அல்லாது உள்ளூரில் ஏற்பட்ட தமிழ்- முஸ்லிம் இன முரண்பாடுகளும் இந்நூலகத்தின் வளர்நிலை குன்றியமைக்கு காரணங்களாக அமைந்துள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரை, பொது நூலகத்துறை வளர்ச்சி என்பது பெருமளவு அந்நூலகங்கள் சார்ந்துள்ள திணைக்களங்களான பிரதேச சபை, நகரசபை, மாநகர சபைகளின் ஆதரவில் இயங்கி வருவதனாலும், பெருமளவு அவ்வவ் பிரதேசங்களில் இயங்குகின்ற உள்ளூராட்சி மன்றங்கள் யாவும் பிரதேசத்தின் தொழிற்துறைகள் மூலமும், மன்றத்தின் சேவைகள் மூலமும் ஈட்டுகின்ற வருமானத்தினை ஆதாரமாகக் கொண்டு இயங்குவதனால் வருவாய்க் குரிய வழிவகைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதும் நூலகம் போன்ற சேவை மையங்களுக்கு பெருந்தொகை நிதியை தொடர்ந்து செலவு செய்வதென்பதும் நடைமுறைச் சிக்கல்களைக் கொண்டது என்றாலும்! பொது நூலகத்துறையினால் சமூகத்துக்கு கிடைக்கின்ற பயனும், பொது நூலகத்தின் வினைத் திறன் மிக்க செயற்பாடுகள் மூலமே நிறுவனத்தினை ஈர்த்துக் கொள்ள முடியும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனைத் தாண்டி ஒவ்வொரு நூலகங்களிலும் நூலகத்துறை சார்ந்த அறிவும், ஆர்வமும் உள்ள உத்தியோகத்தர்கள் பணியாற்றினால் மாத்திரமே நமது பொது நூலகத்துறையில் வளர்ச்சி காண முடியும்.

இலங்கையில் கல்வி அமைச்சின் கீழ் இயங்குகின்ற 'தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள்' சபையின் விதந்துரைகள், ஆலோசனைகள், வழிகாட்டல்கள் காலங் காலமாக பொது நூலகங்களுக்கும் ஏனைய பாடசாலை, பல்கலைக் கழக, விசேட நூலகங்களுக்கும் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்ற போதும், சமூக மட்டத்தில் அவை பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தியதாய் அண்மைக்காலத்தில் எவ்வித பதிவுகளும் இல்லை எனவே கூற வேண்டும்.

பொதுநூலகங்களில் காலங்காலமாய் நிலவும் பௌதீக வளப்பற்றாக்குறைகள்! மற்றும் பணி புரிகின்ற நூலக உத்தியோகத்தர்களிடையே நிலவுகின்ற அசமந்தப் போக்குகள் மற்றும் அவர்களுக்கு போதிய நூலக முகாமைத்துவ நிபுணத்துவம் இல்லாமை! மற்றும் ஒரு அரச தொழில் வாய்ப்பாக மாத்திரம் இத்துறையினைக் கையாள்கின்றமை! போன்ற விடயங்களும் பொது நூலகத்துறை வளர்ச்சிக்கு தடையாக உள்ளமையினை நாம் காண முடியும்.

கோறளைப்பற்று பிரதேச சபையின் கீழ் தற்போது 08 பொதுநூலகங்களும் 07 வாசிகசாலைகளும் இயங்கி வருகின்றன. அவற்றுக்கு நாளாந்தம் 05க்கு மேற்பட்ட தினசரிப் பத்திரிகைகள், 02 வாரப் பத்திரிகைகள் மற்றும் இலங்கை, இந்திய தமிழ் சஞ்சிகைகள் என பல்வேறு தகவல் ஆவணங்கள் தொடர்ச்சியாக கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன. அத்தோடு, குறித்த நூலகங்களுக்கான மின்சாரம், தொலைபேசி, ஏனைய காகிதாதிகள், பராமரிப்புப் பொருட்கள் போன்றவற்றுக்காக ஒவ்வொரு வருடமும் சபையினால் பல இலட்ச ரூபாய்கள் செலவிடப் படுகின்றன.

சபையின் கீழ் இயங்கும் ஏனைய தரம்-3 பொது நூலகங்களோடு ஒப்பிடும்போது வாழைச்சேனை பொதுசன நூலகமானது ஓரளவு பௌதீக வளங்களைக் கொண்டு இயங்கி வந்தாலும், போதிய நூல்கள் இல்லாமை, சிறுவர் பிரிவு அபிவிருத்தி செய்யப்படாமை, கட்டிடம் மற்றும் ஏனைய தளபாடங்களின் குறைபாடுகள் முழுமையாக நிவர்த்தி செய்யப்படாமலேயே உள்ளன. சிறுவர் நூலகத்திற்குரிய தளபாடங்கள், நூல் ஆவணங்கள், புத்தக இறாக்கைகள் என்பவற்றோடு, இரவல் பகுதிக்கு போதிய நூல்கள், புத்தக இறாக்கைகள் இல்லாமை நீண்ட கால குறைபாடாக நிலவி வருகின்றது. கடந்த காலங்களில் அதிகளவு வாசகர்கள் வந்து செல்கின்ற நூலகமாக விளங்கியது. தற்போது போதிய நூல்கள் இல்லாமையினால் அவர்களது தேவைகளை நிறைவேற்ற முடியாமையினால் வாசகர்கள் வரவும் நாளடைவில் குறைந்து வருகின்றது.




மிக நீண்ட காலமாக நூலகத்திற்கு கணினி, போட்டோ பிரதி இயந்திரம் போன்றவற்றினை பெற்றுக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள போதும், கோறளைப்பற்று பிரதேச சபைத் தவிசாளரின், 2020ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் புதிதாக கணினி, பிரிண்டர் மற்றும் போட்டோ பிரதி இயந்திரம் போன்றவை கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

அத்தோடு பல புதிய கலை, இலக்கியம், சமயம், நூலகம் சார்ந்த சஞ்சிகைகளை கொழும்பு பூபாலசிங்கம் புத்தகசாலையில் இருந்து பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இவ்வருடம் 50ஆவது ஆண்டு நிறைவு காணுகின்ற நூலகமானது இன்னும் பல வழிகளிலும் அபிவிருத்தி செய்யப்படுகின்ற தேவை உள்ளது. பிரதேசத்தின் மையத்தில் அமைந்திருந்து தமிழ், முஸ்லிம் மக்களின் வாசிப்பு தேவையினை கடந்த ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக பல்வேறு நெருக்கடியான தருணங்களைக் கடந்தும் நிறைவேற்றி வந்துள்ளது இந்நூலகம்.


50வருடத்தினை முன்னிட்டு பல குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டிய தேவை உள்ளது.

- நூலகத்திற்கென வாகனத் தரிப்பிட வசதி.
- நூலகத்திற்குரிய புத்தகங்கள், தளபாடங்கள் பெறுதல்.
- எப்போதும் நீர் தேங்கி, குட்டை போன்று காட்சியளிக்கும் நூலக முகப்புப் பகுதிக்கு மண் நிரப்பி உயர்த்தல். சீமெந்துக் கல் பரவல்.
- நூலகத்தின் சிறுவர் பகுதியினை அபிவிருத்தி செய்தல்.
- கணினிப் பகுதியினை தனியாக பிரித்து பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்தல்.
- பாதுகாப்பு கமெராக்கள் பொருத்துதல்.
- நூலகத்தின் நுழைவாயில் பகுதியினை பெரிதாக்கி பெயர்ப் பலகை பொறித்தல்.
- நூலகத்தில் சேதமடைந்துள்ள கூரைப் பகுதிகள், கதவுகள், ஜன்னல்களைப் பழுதுபார்த்தல்.
- மின்விசிறிகள், மின்குமிழ்கள் பொருத்துவதோடு மின் ஒழுக்குகளை பழுதுபார்த்தல்.
- நூலக ஊழியர்களுக்கென தனியான மலசல கூட வசதி ஏற்படுத்தல்.
- நூலகத்திற்கு தனியான குடிநீர் வசதி.

போன்ற விடயங்களை இங்கு கோடிட்டுக் காட்டி, இப்பதிவு வாயிலாக பிரதேச சபையின் தவிசாளர், செயலாளர் பார்வைக்கு சமர்ப்பிக்கின்றோம்.

# குழந்தைகளுக்கு வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்துவது எப்படி?

**புத்தகம் வாசிப்பு என்பது இன்றைய தலைமுறை குழந்தைகளுக்கு ஆர்வம் இல்லாத ஒரு பொழுது போக்கவே மாறிவிட்டது. குழந்தைகளின் வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்த என்ன செய்யலாம் என்று அறிந்து கொள்ளலாம்.**



**கு**ழந்தைகள் தொடர்ந்து புத்தகம் படிப்பதன் மூலம் அவர்களின் எண்ண ஓட்டம் சீராக இருக்கும் என்பதைத் தாண்டி புத்திக் கூர்மை, நினைவாற்றல் மேம்படுதல் போன்ற பண்புகளும் தானே வளரும் என்கிறார்கள் அறிஞர்கள்.

"குழந்தைகளின் அறிவு வளர்ச்சி பெரும்பாலும் மூன்று வயதிலே தொடங்கி விடுகிறது. அந்தப் பருவத்தில் வாசிப்பை அவர்களுக்குப் பழக்கப்படுத்துவது அவசியம். பெற்றோர்களின் சில செயல்பாட்டின் மூலம் வாசிப்பு பழக்கத்தை குழந்தைகளிடம் நிச்சயம் கொண்டு வர முடியும்.

* குழந்தைகளுக்குப் புத்தக வாசிப்பைக் கொண்டுவர நினைக்கும் பெற்றோர்கள் முதலில் தாங்கள் தினமும் வாசிக்கும் புத்தகத்தை கொண்டு இருக்க வேண்டும். இது குழந்தைக்கு இயல்பாகவே வாசிப்பு மீது ஆர்வத்தை ஏற்படுத்தும்.

*இரண்டு வயதுக்குப் பிறகு, குழந்தைகளுக்குப் பொம்மைகள் அல்லது மொபைலை காட்டி உணவுட்டுவதைத் தவிர்த்து, படங்கள் நிறைந்த புத்தகங்களை வைத்துக் கொண்டு, அதில் உள்ள படங்களை அவர்களுக்குப் புரியும் விதத்தில் கதைகளாக எடுத்துச் சொல்லி உணவூட்டலாம்.

*ஆரம்பத்தில் குழந்தைகளுக்கு அனிமேஷன் புத்தகங்கள், வண்ணத் துணியினால் ஆன புத்தகங்கள் என வித்தியாசமான புத்தகங்களை வாங்கிக் கொடுத்தாலே அவர்களின் வாசிப்பு ஆர்வம் தானாக அதிகரிக்கும் விடும். முதலில் குழந்தைகளுக்கு வாசிப்பை அறிமுகப்படுத்தும் போது அவர்கள் கையாள எளிதான வகையில் நீளவடிவிலான எடை குறைந்த புத்தகங்களைக் குழந்தைகளிடம் கொடுத்துப் பழக்கப்படுத்துங்கள்.

*புத்தகத்தை முதன்முதலாகக் குழந்தைகள் வாசிக்கும்போது, ஒவ்வொரு வார்த்தையையும் சத்தமாக வாசிக்கச் சொல்லுங்கள்.அவர்கள் வாசிக்கத் திணறினாலோ அல்லது தவறாக சொற்களை உச்சரித்தலோ ,நீ வாசித்தது தவறு, வாசிக்கக்கூடத் தெரியாதா… என்பது போன்ற வார்த்தைகளைத் தவிர்த்து, இந்த வார்த்தையை இப்படிச் சொல்ல வேண்டும். ஒரு முறை முயன்று பார் என்று அன்புடன் சொல்லி வாசிக்கச் சொல்லுங்கள்.

*பொதுவாக பரிசுப் பொருட்கள் குழந்தைகளை ஈர்க்கக் கூடிய ஒரு விஷயம். எனவே குழந்தைகளுக்கு நீங்கள் ஏதேனும் பரிசளிக்க விரும்பினால் அவர்களுக்கு ஆர்வம் நிறைந்த, துறை சார்ந்த புத்தகங்களை வாங்கிக் கொடுக்கலாம் அல்லது அவர்கள் யாருக்கேனும் ஏதேனும் பரிசளிக்க விரும்பினாலும் புத்தகத்தின் முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்லி புத்தகத்தையே பரிந்துரை செய்யுங்கள்.

*குழந்தையின் கையில் ஒரு புத்தகத்தை அளித்து, முதலில் அவர்களை வாசிக்கச் சொல்லி பின் அதில் வரும் ஒரு சிறிய கதாப்பாத்திரம் பற்றி அவர்களுடன் உரையாடுவது, அல்லது அவர்களை நடித்துக் காட்டச் சொல்வது போன்றவற்றை செய்யச் சொல்லலாம். அதன் பிறகு அவர்கள் சிறப்பாக செயல்பட்டதற்காகச் சிறு பரிசுகள் வழங்கலாம்.

* இன்றைய குழந்தைகள் ட்ஜிட்டல் மீது அதிக ஆர்வம் நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். எனவே, உங்கள் குழந்தை ஓரளவு வாசிப்புத் திறனை அடைந்த பிறகு, படிப்பதற்கான ஆப்கள் மூலமாகத் தினமும் கால் மணி நேரம் ஏதேனும் ஒரு தகவலை வாசிக்கச் சொல்லுங்கள். அது உங்களுக்கு ஒரு புதிய தகவல் என்பது போன்ற ரியாக்ஷனை அவர்களிடம் காட்டுங்கள்.

*புத்தகக் கண்காட்சி நடைபெறும் இடங்களுக்குக் குழந்தைகளை அழைத்துச் சென்று அவர்கள் விரும்பும் புத்தகத்தை அவர்களையே தேர்வு செய்யச் சொல்வதுடன், மற்ற துறை சார்ந்த புத்தகங்களைப் பற்றியும் விரிவாக விளக்குங்கள். இது அவர்களுக்குப் புத்தகம் மீதான ஆர்வம் அதிகரிக்கக் காரணமாக இருக்கும்.

*விடுமுறை நாள்களில் உங்கள் குழந்தையை நூலகங்களுக்கு அழைத்துச் சென்று அவர்களுடன் குறைந்தது ஒரு மணி நேரம் அங்கே செலவிடுங்கள், அதன் பின் வீட்டுக்கு அழைத்து வந்து அவர்கள் படித்ததை வீட்டில் உள்ள அனைவரிடமும் பகிர்ந்து கொள்ளச் செய்யுங்கள்.

* குழந்தைகளுக்கு பெட் டைம் ஸ்டோரிஸ் சொல்லும் போது புத்தகத்தில் உள்ள படங்களை குழந்தைகள் பார்க்கும் விதத்தில் வைத்துச் சொல்லுங்கள். இடை இடையே அவர்களின் கருத்துக்களையும் கேட்டுப் பாராட்டுங்கள். இனி உங்கள் குழந்தையும் வாசிப்பை தங்கள் பழக்கமாக மாற்றிக்கொள்வார்கள்.

நன்றி:
https://www.maalaimalar.com/health/childcare/2022/01/04125700/3357621/How-to-inculcate-reading-habits-in-children.vpf

# ஆவணப் பெட்டகம்

01



தமிழறிஞர்
புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை
இலங்கை

**'ஆவணப் பெட்டகம்'** எனும் இப்பகுதி வழியாக, அரிய பல விடயங்களைத் தேடி தர விரும்புகின்றோம். முதல்பகுதியாக வாழைச்சேனை மண்ணின் மைந்தர்- கொஸ்தாப்பல் கந்தையா. அவர்களைப் பற்றி, புலவர்மணி.ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் தனது 'உள்ளதும் நல்லதும்' தொடரில் பதிவு செய்துள்ளவற்றை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம். 'சிந்தாமணி' இதழில் தொடராக வெளிவந்த 'உள்ளதும் நல்லதும்' 1982ஆம் ஆண்டில் நூலாக மறுபதிப்பு செய்து வெளியிடப்பட்டது. அந்நூலில் "கல்லடி அடியெடுக்க அடியேன் தொடர்ந்த கட்டளைக் கலித்துறை!' எனும் தலைப்பின் கீழ் இப்பதிவு இடம்பெற்றுள்ளது.




## வாழைச்சேனையில் சைவப்பாடசாலை நிறுவிய கொஸ்தாப்பல் கந்தையா

"நமது பிள்ளைகள் இருக்க வேண்டிய இடத்தில் இருக்க வேண்டும்" என்னும் குறிக்கோள் கொண்ட மட்டக்களப்பு இயக்கம் அதிதீவிரம் அடைந்து விட்டது. எங்கும் சைவப் பள்ளிக்கூடம் என்பதே பேச்சாயிற்று. பல கட்டிடங்கள் எழும்பிக் கொண்டிருக்கின்றன. 1928ஆம் ஆண்டென்று நினைக்கின்றேன். வாழைச்சேனையிலே ஒரு பிரபல தனவந்தர் இருந்தார். வலையிறவு என்னும் கிராமத்திலும் ஒரு பிரபல தனவந்தர் இருந்தார். அவர் பெயர் கொஸ்தாப்பல் கந்தையா, இவர் பெயர் தம்பிமுத்துப் போடியார். இருவரும் பெரிய உபகாரிகள். தம்பிமுத்துப் போடியாரின் உபகாரம் பற்றிப் பின்னொரு கட்டுரையில் சொல்கிறேன். கொஸ்தாப்பல் கந்தையா பற்றிய செய்திகளை இங்கே பார்ப்போம்.



கொஸ்தாப்பல்
**கந்தையா**

கொஸ்தாப்பல் என்பது ஒரு அரசாங்க உத்தியோகம். அது விதானைக்கும் உடையாருக்கும் இடைப்பட்ட பதவி. Constable என்னும் மேல்நாட்டு மொழியை இவ்வண்ணம் தமிழ் வடிவில் வழங்குவர். இலக்கணக் கொத்தரும் இந்தச் சொல்லாக்க முறையை ஆதரிக்கின்றார். வாழைச்சேனை ஆறுமுகம் கொஸ்தாப்பல், ஆரையம்பதி தம்பாப்பிள்ளைக் கொஸ்தாப்பல், களுவாஞ்சிக்குடி வேல்முருகுக் கொஸ்தாப்பல் முதலிய சிலரின் பெயர் எனக்கு ஞாபகத்துக்கு வருகிறது.

கொஸ்தாப்பல் தம்பாப்பிள்ளையின் மகன் சீனித்தம்பி என்பவர் என்னுடன் ஒரே காலத்தில் யாழ்ப்பாணம் வந்தவர். கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றுக் கலாசாலை அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றிருக்கும் அன்னார் ஒரு சிறந்த தமிழறிஞர். அதிதீவிர மதி படைத்தவர். மட்டக்களப்பு இளைப்பாற்றுச் சம்பளம் பெறுவோர் சேமநலச் சங்கத்தின் தாபகருள் ஒருவருமாவார்.

கொஸ்தாப்பல் கந்தையா தமது சொந்தப் பணத்திலே வாழைச்சேனையில் ஒரு சைவப் பாடசாலை தாபித்துத் தமது பணத்திலேயே ஆசிரியர்களுக்குச் சம்பளமும் கொடுத்து வந்தார். பக்கத்தில் ஒரு பழைய கிறிஸ்தவ பாடசாலையும் இருந்தது. அது இங்கிலாந்து திருச்சபைக்குச் சேர்ந்தது. முகாமைப் பாதிரியாருக்கு இது பிடிக்கவில்லை. உடனே அரசாங்க அதிபரிடம் ஓடுகிறார்.

பாதிரியாரின் முறைப்பாட்டைக் கேட்ட அதிபர் கொஸ்தாப்பல் கந்தையாவை விளங்க ஒருநாள் குறித்துக் கட்டளையும் அனுப்புகிறார். நாளும் வந்தது. அரசாங்க அதிபர் முதலியாருடன் வந்திருக்கிறார். கந்தையாவின் கொஸ்தாப்பல் வேலை பறக்கப் போகிறது என மக்கள் ஒருவரோடொருவர் பேசிக் கொள்கிறார்கள்.

விளக்கம் தொடங்கப் போகிறது. பாதிரியாருக்கு ஆசனம். நம்மாட்கள் நிற்கிறார்கள். ஒரே பயம். ஏசண்டர் வந்திருக்கும்போது திலாந்து (கிணற்றுத்துலா) குளறினாலும், காகம் கத்தினாலும் விதானைமார் ஓடிப்போய் அமைதியை நிலைநாட்டும் காலம் அது.

முதலியார் பெயர் கூப்பிடுகிறார். "கொஸ்தாப்பல் கந்தையா"

"நிற்கிறேன்" என்று பதில் அளித்துக் கந்தையா போய் மேசையின் முன்னே நிற்கிறார்.

"நீர் இங்கே ஒரு சைவப் பள்ளிக்கூடம் ஒன்றைக் கட்டி எங்களுடைய பள்ளிக்கூடத்துக்கு நட்டம் உண்டாக்குவதாக முறைப்பாடு வந்திருக்கிறது. இதற்கு என்ன சொல்லுகிறீர்? என்று முதலியார் கேட்கிறார். கந்தையா ஒன்றும் பேசாமல் தமது சட்டைப் பைக்குள்ளே கையைப் போட்டுச் சில கடதாசிகளை எடுக்கிறார். மார்பிலே குத்தியிருந்த கொஸ்தாப்பல் சின்னத்தைக் கழற்றுகிறார். அவற்றை மேசையில் வைத்துவிட்டு வீறுநடை போட்டு வெளியேறுகிறார்.

"கொஸ்தாப்பல்! கொஸ்தாப்பல்! கொஸ்தாப்பல்!" என்று முதலியார் கூப்பிடுகிறார்.

"கொஸ்தாப்பல் மேசையில் இருக்கிறார். கந்தையா போகிறார்" என்று சொல்லிக்கொண்டு ஒரே நடையாய் வீடு போய்ச் சேருகின்றார் கந்தையா.

அடங்காத கோபத்துடன் வெளியேறுகிறார் அரசாங்க அதிபர். இதன் தொடர்பாகச் சொல்ல இன்னும் நீண்ட கதை இருக்கிறது. அது மிகவும் நல்ல கதை. எனினும் இவ்வளவில் இந்தக் கதையைக் கட்டுகின்றேன். இந்தச் சைவத் தமிழ் வீரனுக்கு ஆலோசனை கூறவும் பக்கபலமாயிருக்கவும் நான் இடையிடையே வாழைச்சேனைக்குச் சென்று அவருடன் தங்கியிருப்பது வழக்கம். அந்தக் காலப்பகுதியில் நான் திருகோணமலை இந்துக்கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராய் இருந்தேன். மட்டக்களப்பிலிருந்து திருகோணமலைக்குச் செல்லும்போதும், திரும்பி மட்டக்களப்புக்கு வரும்போதும் வாழைச்சேனையில் வீரர் கொஸ்தாப்பல் கந்தையா வீட்டில் தங்கியிருந்தே பயணத்தைத் தொடர்வேன்.

இதற்கிடையில் கொஸ்தாப்பல் வேலை நீக்கம் செய்யப்பட்டதும், வேலைக்கு அரசாங்க அதிபர் விண்ணப்பம் கோரியதும், ஒருவரும் வேலைக்கு விண்ணப்பம் செய்யாமல் விட்டதும், கந்தையா திரும்பவும் கொஸ்தாப்பலானதும் வாசகர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய நிகழ்ச்சிகளாகும். கந்தையாவின் இந்த வெற்றி சைவ அரசாங்க ஊழியர்களுக்கு அந்நாளில் ஏற்பட்டிருந்த பயத்தை அடியோடு தொலைத்துவிட்டது. ●

# உலகிலுள்ள மிகப்பெரிய 10 நூலகங்கள்



**நூ**லகங்கள் நமக்கு தெரியாத பல விஷயங்களை கற்று தரும் ஒரு அமைதியான பள்ளிக்கூடம். நாம் அறிந்திராத படித்திராத பல அரிய புத்தகங்கள் இந்த நூலகங்கள் மூலமாக பாதுகாக்கப்பட்டு எல்லா தலைமுறையின ருக்கும் அறிவை அதிகரித்து கொண்டே இருக்கிறது. உலகிலுள்ள பல அறிஞர்கள் எழுதிய பல நூல்கள் நூலகங்கள் வழியாக பலராலும் படிக்கப்பட்டு வருகிறது.

ஒரு நூலகத்தில் புத்தகங்கள், பத்திரிகைகள், செய்தித்தாள்கள், கையெழுத்துப் பிரதிகள், திரைப் படங்கள், வரைபடங்கள், பதிப்புகள், ஆவணங்கள், மைக்ரோஃபார்ம், குறுந்தகடுகள், கேசட்டுகள், வீடியோடேப்கள், டிவிடிகள், ப்ளூ-ரே டிஸ்க்குகள், மின் புத்தகங்கள், ஆடியோபுக்குகள், டேட்டா பேஸ்கள் மற்றும் பிற ஆவணங்கள் சேமித்து வைக்கப்பட்டிருக்கும். எல்லா நாடுகளிலும் ஏராளமான சிறிதும் பெரிதுமான நூலகங்கள் உள்ளன. அதில் மிகப்பெரிய 10 நூலகங்கள் பற்றி தெரிந்து கொள்வோம்.

### 10. நேஷனல் லைப்ரரி ஆப் ரஸ்யா
### (National Library of Russia)

செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கில் உள்ள ரஷ்யாவின் தேசிய நூலகம் நாட்டின் மிகப் பழமையான பொது நூலகம் மட்டுமல்ல, நாட்டின் முதல் தேசிய நூலகமும் ஆகும். 1795 முதல் 1917 வரை இம்பீரியல் பொது நூலகம் என்று அழைக்கப் பட்டது. இம்பீரியல் பொது நூலகம் 1795 ஆம் ஆண்டில் கேத்தரின் தி கிரேட் என்பவரால் நிறுவப்பட்டது.

1917 முதல் 1925 வரை ரஷ்ய பொது நூலகம் எனவும் 1925 முதல் 1992 வரை மாநில பொது நூலகம் எனவும் அழைக்கப்பட்டது. இது ரஸ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் அமைந்துள்ளது. இங்கு புத்தகங்கள் உட்பட 36.5 மில்லியன் பொருட்களின் தொகுப்புகள் உள்ளன. வருடத்திற்கு சராசரியாக 1 மில்லியன் வாசகர்கள் வருகிறார்கள்.

### 9. நேஷனல் லைப்ரரி ஆப் சீனா
### (National Library of China)

சீனாவின் தேசிய நூலகம் பெய்ஜிங்கில் அமைந்துள்ளது. 37 மில்லியனுக்கும் அதிகமான பொருட்களின் தொகுப்பைக் கொண்டு ஆசியா வின் மிகப்பெரிய நூலகமாக உள்ளது. இது சீன இலக்கியங்கள் மற்றும் வரலாற்று ஆவணங்களின் மிகப்பெரிய தொகுப்புகளைக் கொண்டுள்ளது.

சீனாவின் தேசிய நூலகத்தின் முன்னோடி, இம்பீரியல் லைப்ரரி ஆஃப் பீக்கிங், கிங் வம்சத்தின் ஆட்சியில் 9 செப்டம்பர்1909 இல் நிறுவப்பட்டது. வருடத்திற்கு சராசரியாக 5.2 மில்லியன் வாசகர்கள் வருகிறார்கள். இங்கு மொத்தம் 1365 ஊழியர்கள் வேலை செய்கிறார்கள்.

### 8. பிப்லியோதெக் நேஷனல் டி பிரான்ஸ்
### (Bibliothèque national de France)

பிரான்சின் தேசிய நூலகம் 1368 இல் 5 ம் சார்லஸ் ஆல் லூவ்ரே அரண்மனையில் நிறுவப்பட்டது. நவீனப்படுத்தப்பட்ட பிரான்சின் தேசிய நூலகம் 15 டிசம்பர் 1996 இல் திறக்கப்பட்டது. புத்தகங்கள், பத்திரிகைகள், செய்தித்தாள்கள், ஒலி மற்றும் இசை பதிவுகள், காப்புரிமைகள், தரவுத்தளங்கள், வரைபடங்கள், ஸ்டாம்ப்கள், வரைபடங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் என 40 மில்லியன் பொருட்களின் தொகுப்புகள் உள்ளது. வருடத்திற்கு 1.3 மில்லியன் வாசகர்கள் இங்கு வருகிறார்கள். 2668 ஊழியர்கள் இங்கு வேலை செய்கிறார்கள்.

### 7. நேஷனல் டயட் லைப்ரரி
### ( National Diet Library)

ஜப்பானின் தேசிய நூலகம் ஜப்பானின் தேசிய டயட் உறுப்பினர்களுக்கு பொதுக் கொள்கையின் விஷயங்களை ஆய்வு செய்வதில் உதவுவதற்காக இது 1948 இல் நிறுவப்பட்டது. இது டோக்கியோவில் அமைந்துள்ளது. தேசிய உணவு நூலகம் ஜூன் 1948 இல் இன்றைய மாநில விருந்தினர் மாளிகையில் முன்னாள் அகசாகா பேலஸில் 1,00,000 தொகுதி களின் ஆரம்பத் தொகுப்போடு திறக்கப் பட்டது.

தற்பொழுது இங்கு 41.9 மில்லியன் தொகுப்புகள் உள்ளன. ஆண்டிற்கு 7 லட்சம் வாசகர்கள் வந்து செல்கிறார்கள்.

### 6. ரஷ்யன் ஸ்டேட் லைப்ரரி
### ( Russian State Library)

ரஷ்ய அரசு நூலகம் மாஸ்கோவில் அமைந்துள்ள ரஷ்யாவின் தேசிய நூலகம். 1925 ஆண்டு முதல் சோவியத் ஒன்றியத்தின் வி.ஐ. லெனின் மாநில நூலகம் என்று பெயரிடப்பட்டது 1992 இல் ரஷ்ய அரசு நூலகம் என மறுபெயரிடப்பட்டது. இந்த நூலகத்தில் 27

மில்லியனுக்கும் அதிகமான அலமாரிகள் உள்ளன. இதில் 47.2 மில்லியனுக்கும் அதிகமான பொருட்கள் உள்ளன.

இதில் 17 மில்லியனுக்கும் அதிகமான புத்தகங்கள் மற்றும் தொடர் தொகுதிகள், 13 மில்லியன் பத்திரிகைகள், 3 லட்சத்து 50 ஆயிரம் மியூசிக் ஸ்கோர்கள் மற்றும் ஒலி பதிவுகள், 1,50,000 வரைபடங்கள் மற்றும் பல உள்ளன. உலகின் 247 மொழிகளில் பொருட்கள் உள்ளன. வெளிநாட்டுப் பகுதி மொத்த சேகரிப்பில் சுமார் 29 சதவீதத்தைக் கொண்டுள்ளது. 9 லட்சம் வாசகர்கள் வருடத்திற்கு வந்து செல்கிறார்கள்.

### 5. ஷாங்காய் லைப்ரரி (Shanghai Library)

ஷாங்காய் நூலகம் ஷாங்காய் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப தகவல் நிறுவனத்தையும் கொண்டு ள்ளது. சீனாவின் ஷாங்காய் பெய்ஜிங்கில் உள்ள தேசிய நூலகத்திற்குப் பிறகு இது சீனாவின் இரண்டாவது பெரிய நூலகமாகும். 83,000 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட நவீனப்படுத்தப்பட்ட இந்த நூலகம் டிசம்பர் 20, 1996 அன்று பொதுமக்க ளுக்காக திறக்கப்பட்டது. 5 கோடி தொகுப்புகள் இந்த நூலகத்தில் உள்ளது.

### 4. லைப்ரரி அண்ட் அர்ச்சிவ்ஸ் கனடா (Library and Archives Canada)

கனடாவின் ஒட்டாவா நகரத்தில் அமைந்துள்ள இந்த நூலகம் மற்றும் ஆவணக்காப்பகம் பாரம்பரிய ஆவணங்களை அதிக அளவில் சேமித்து பாதுகாக்கிறது. கனடாவின் இந்த தேசிய நூலகம் 1953 ம் ஆண்டில் நிறுவப்பட்டது. இங்கு 5.4 கோடி தொகுப்புகள் பாதுகாக்கப்படுகிறது. இங்கு கனடா அரசாங்கத்தின் ஆவண பதிவுகள், அங்கீகரிக்கப்பட்ட தனியார் ஆவணங்கள், 20 மில்லியன் புத்தகங்கள், 24 மில்லியன் புகைப் படங்கள் மற்றும் ஒரு பீட்டாபைட்டுக்கு மேல் டிஜிட்டல் கன்டென்ட்கள் இன்னும் பல பாதுகாக்கப்படுகின்றன.

### 3. நியூயார்க் பப்ளிக் லைப்ரரி (New York Public Library)

இது நியூயார்க் நகரில் உள்ள ஒரு பொது நூலக அமைப்பு. ஏறக்குறைய 5.5 கோடி பொருட்கள் கொண்ட நியூயார்க் பொது நூலகம் அமெரிக்கா வின் இரண்டாவது பெரிய பொது நூலகமாகும். உலகின் மூன்றாவது பெரிய நூலகம். இது ஒரு அரசு சாராத தனியாரால் நிர்வகிக்கப்படும், இலாப நோக்கற்ற நிறுவனமாகும்.

இது தனியார் மற்றும் பொது நிதியுதவியுடன் இயங்குகிறது. தி நியூயார்க் பொது நூலகம், ஆஸ்டர், லெனாக்ஸ் மற்றும் டில்டன் ஃபவுண்டே ஷன்ஸ் என அதிகாரப்பூர்வமாக பட்டியலிடப்பட்ட இந்த நூலகம் 19 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப் பட்டது. வருடத்திற்கு 1.8 கோடி வாசகர்கள் வந்து செல்கின்றனர்.

### 2. லைப்ரரி ஆப் காங்கிரஸ் ( Library of Congress)

காங்கிரஸின் நூலகம் யுனைடெட் ஸ்டேட்ஸ் காங்கிரஸுக்கு அதிகாரப்பூர்வமாக சேவை செய்யும் ஆராய்ச்சி நூலகமாகும். வாஷிங்டன், டி.சி.யில் உள்ள கேபிடல் ஹில்லில் மூன்று கட்டிடங்களில் இந்த நூலகம் அமைந்துள்ளது. உலகின் அனைத்து பகுதிகளிலிருந்தும் 450க்கும் மேற்பட்ட மொழிகளிலிருந்தும் ஆராய்ச்சிப் பொருட்களை பாதுகாக்கிறது. இந்த நூலகத்தின் தொகுப்புகளில் 470 மொழிகளில் 32 மில்லியனுக் கும் அதிகமான பட்டியலிடப்பட்ட புத்தகங்கள் மற்றும் பிற பிரிண்ட் மெட்டீரியல்கள் உள்ளன.

61 மில்லியனுக்கும் அதிகமான கையெழுத்துப் பிரதிகள் , 1 மில்லியனுக்கும் அதிகமான அமெரிக்க அரசாங்க வெளியீடுகள், கடந்த மூன்று நூற்றாண்டுகளில் உள்ள உலக செய்தித் தாள்களின் 1 மில்லியன் முக்கிய பதிப்புகள், 33,000 புத்தகமாக்கிய செய்தித்தாள் தொகுதிகள், 5,00,000 மைக்ரோஃபில்ம் ரீல்கள், மொத்தம் 6,000 க்கும் மேற்பட்ட தலைப்புகள், மொத்தம் 1,20,000 க்கும் மேற்பட்ட காமிக் புத்தக வெளியீடுகள், 5.3 மில்லியன் வரைபடங்கள், 6 மில்லியன் இசை படைப்புகளின் காகிதங்கள், 3 மில்லியன் ஒலி பதிவுகள், சிறந்த மற்றும் பிரபலமான கலைத் துண்டுகள் மற்றும் கட்டடக்கலை வரைபடங்கள் உட்பட 14.7 மில்லியனுக்கும் அதிகமான பிரிண்ட் கள் மற்றும் புகைப்படப் படங்கள் போன்ற 168 மில்லியன் பதிவுகள் இந்த நூலகத்தில் உள்ளது.

### 1. பிரிட்டிஷ் லைப்ரரி (British Library)

பிரிட்டிஷ் நூலகம் யுனைடெட் கிங்டத்தின் தேசிய நூலகமும் நூல்களின் தொகுப்புகளின் எண்ணிக்கையில் உலகின் மிகப்பெரிய நூலகங்க ளின் பட்டியலில் முதல் இடத்தில் இருக்கிறது. இது பல நாடுகளின் 170 லிருந்து 200 மில்லியன் பொருட்களைக் கொண்டிருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது. லண்டனில் யூஸ்டன் சாலையில் அமைந்துள்ளது.

ஒரே நேரத்தில் சுமார் 1,200 வாசகர்கள் அமர்ந்து படிப்பதற்கு நூலகத்தில் இடம் உள்ளது. பிரிட்டிஷ் நூலகம் ஒரு பெரிய ஆராய்ச்சி நூலகமாகும். இதில் பல மொழிகளில் தரவுகள் உள்ளன. பல வடிவங்களில், பிரிண்ட் மற்றும் டிஜிட்டல் புத்தகங்கள், கையெழுத்துப் பிரதிகள், இதழ்கள், செய்தித்தாள்கள், பத்திரிகைகள், ஒலி மற்றும் இசை பதிவுகள், வீடியோக்கள், நாடக ஸ்கிரிப்ட்கள், காப்புரிமைகள், டேட்டாபேஸ்கள், உலக வரைபடங்கள், முத்திரைகள், பிரிண்ட்கள், வரைபடங்கள் என நூலகத்தின் சேகரிப்பில் சுமார் 14 மில்லியன் புத்தகங்கள் உள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் சுமார் மூன்று மில்லியன் பொருட்களை நூலகம் சேர்க்கிறது. இது 9.6 கிலோமீட்டர் நீளம் கொண்ட அளவுக்கு அலமாரியின் இடம் தேவைப்படுகிறது.

# கோறளைப்பற்றுப் பிரதேச நாட்டாரியல் அம்சங்கள்



**திருமதி. ஸோபா ஜெயரஞ்சித்**
தவிசாளர், கோறளைப்பற்று பிரதேச சபை.

**ப**ண்பாட்டின் ஒரு கூறாக விளங்குவது நாட்டாரியல் எனலாம். நாட்டார் என்னும் சொல் பொதுமக்களைக் குறிக்கிறது. பொதுமக்களது தேச வழமைகள், தேச வழக்காறுகள், சமயக் கடமைகள், உரிமைகள் போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய ஒன்றாகவே நாட்டாரியல் எனும் அம்சம் விளங்குகின்றது. இந்நாட்டாரியல் பண்புகளை ஒரு பிரதேசத்தில் அறிய முற்படும் வேளை அப்பிரதேச நாட்டார் பாடல்கள், சமயக் கதைகள், கதைப்பாடல்கள் போன்றவற்றினூடாக அறிய முடிகிறது. இப்பண்புகளை நான்கு வகையில் நோக்குவர். அவையாவன.

1. தனிமனித வாழ்வியல் சடங்குகளுடன் தொடர்பான வழக்காறு
2. தனிமனித கலை பொழுதுபோக்குகளுடன் தொடர்பான வழக்காறு
3. கோயில் கிராமிய சமயம் தொடர்பான வழக்காறு
4. சமுதாய குழுக்கள் ரீதியான வழக்காறு

என்பன அவையாகும்.

இந்நாட்டாரியல் விடயங்களை எமது பிரதேசமான கோறளைப்பற்றுப் பிரதேசத்திலும் நாம் கண்டுகொள்ள முடிகிறது. கோறளைப்பற்றுப் பிரதேசம் என அடையாளப்படுத்தப் படும் பகுதியானது வடக்கே நாசிவன்தீவையும், கிழக்கே வங்கக் கடலையும், தெற்கே கும்புறுமூலையையும் மேற்கே கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவையும் உள்ளடக்கிய பிரதேசமாகும்.

இப்பிரதேசத்தில் பழங்கால நாட்டாரியல் கூறுகளாக இனங்காணப்பட்ட சில நாட்டாரியல் அம்சங்களான ஊர்ப்பெயர் காரணங்கள், மாந்திரீக விடயங்கள், தொழில் சம்பந்தமான விடயங்கள், நாட்டார் பாடல்கள் போன்றவற்றை பதிவு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவ்வகையில் கோறளைப்பற்று என இப்பிரதேசம் அழைக்கப்படுகின்றமைக்கு சில காரணங்கள் கூறப்படுகின்றன. இப்பிரதேசத்தில் கோரைப்புற்கள் அதிகம் நிறைந்த ஒரு பரந்த நிர்வாக நிலப்பரப்பாகக் காணப்பட்டமையால் கோறளைப்பற்று என அழைத்தனர் என்பர்.

கோறளைப்பற்று என்பதற்கான மற்றுமொரு விளக்கமும் உண்டு. கண்டி இராச்சியத்தின் ஆட்சியின் கீழ் மட்டக்களப்புப் பிரதேசம் இருந்தபோது அரசர்கள் தமது ஆட்சிக்குட்பட்ட குறுநிலப் பகுதிகளை 'பத்துவ', 'திஸாவ' என்ற பெயர்களால் அழைத்தனர். அவ்வகையில் வாழைச்சேனைப் பிரதேசம் பத்துவ பிரிவாகக் காணப்பட்டு 'கோறளை' என்னும் அதிகாரியின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. இதனால் 'கோறளை+பத்துவ' என்ற பெயர்களின் சேர்க்கையினால் கோறளைப்பற்று என்று பெயர் வந்ததாகவும் கூறப்படுகிறது.

இதனடிப்படையில் கோறளைப்பற்று பிரதேசத்தின் தலைநகரமாக விளங்குவது வாழைச்சேனை. இதன் பழைய பெயர் 'காக்கைப்பள்ளி' என முன்னோர் கூறியுள்ளனர். மருங்கை மரங்கள் நிறைந்திருந்தமையால் 'மருங்கையடிப்பூவல்' என்ற பெயரும் நிலையாக வழங்கி வந்துள்ளது. பிற்காலத்தில் நாவற்குடா பிரதேச மக்கள் இவ்வூரில் வந்து குடியேறி வாழை மரங்களை நட்டு அது செழிப்பாக வளர்ந்தமையால் வாழையுடன் சேனை என்பதனையும் சேர்த்து வாழைச்சேனை என்ற காரணப் பெயரையே இட்டு வழங்கி வந்தனர். இன்றுவரை இப்பெயரே நிலைத்துள்ளது.

வாழைச்சேனையை அடுத்துள்ள கிராமம் பேய்த்தாழை. இதுவும் காரணப் பெயரே எனக் கூறுகின்றனர். இக்கிராமத்தில் தாழை மரங்கள் ஆற்றங்கரை ஓரங்களில் செழித்து வளர்ந்திருந்தமையும் இதிலே பேய்கள் தங்கியிருந்தன என்ற கர்ண பரம்பரைக் கதையே 'பேய்த்தாழை' என்று மாறி பேத்தாழையாக மருவியதாகக் கூறுவர். ஆனால் உண்மையில் 'பேய் + தாழை' என்பது காய்க்காத தாழை என்பதே காரணம். அதாவது இக்கிராம மாரியம்மன் கோயிலடியில் உள்ள தாழை மரம் ஒரு போதுமே காய்த்ததில்லையாம் இதனால் காய்க்காத தாழையை உடைய கிராமம் பேய்த்தாழையாகியது.

இதனையடுத்து நாசிவன் தீவு என்ற கிராமத்தின் பெயர்க் காரணத்தைப் பார்த்தால், அதுவும் ஒரு காரணப் பெயராகவே வழங்கப்பட்டு வந்துள்ளது. வாழைச்சேனையின் வடக்கே ஓடும் ஆற்றின் முனையில் ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தின் போது 'நாசிவன்' என்ற பெயருடன் தொடர்பான ஒரு வெள்ளைக்காரத்துரை தங்கியிருந்தார். இவரின் பெயரே மருவி பிற்காலத்தில் 'நாசிவன்தீவு' என அழைக்கப்பட்டதாக கதைகள் நிலவுகிறது.

இன்று எமது பிரதேசத்தில் பிரபல்யமான இடமாகத் திகழ்வதும், உல்லாசப் பயணிகளின் கவனத்தை ஈர்த்த இடமாகவும் கல்குடா விளங்குகின்றது. இதுவும் காரணப் பெயரே 'கல் உள்ள குடா' என்ற கருத்திலும் கற்துறைமுகமாகவும் விளங்கியமையே கற்குடாவாக இன்று மாறியுள்ளது.

புதுக்குடியிருப்பு என்பதும் காரணப் பெயரே. பிரித்தானியர் ஆட்சியில் இந்நிலப்பரப்பு காலனித்துவத்திற் குட்பட்டு அரச காணியாக காணப்பட்டது. 'காலனி' என்ற சொல் மருவி மக்கள் குடியிருப்பை அமைத்து 'கொலனி' என அழைத்தனர். பின் வாழைச்சேனையில் இருந்து இங்கு வரும்போது குடியிருப்புக்குப் போகிறோம் என கூறி வருவார்கள். பின் அச்சொல்லுடன் புதிய எனும் சொல்லையும் சேர்த்து புதுக்குடியிருப்பாகியது எனக் கூறுகின்றனர்.

நாட்டாரியல் அம்சங்களைப் பெரிதும் பிரதிபலிக்கக் கூடிய கூறுகளில் முக்கியமானதாக விளங்குகின்ற கிராமிய சமய சார் சடங்குகள் குறித்துப் பார்ப்போமாயின், இவ்வகையில் கோறளைப்பற்றுப் பிரதேச பண்டைய சடங்குகளில் சிறப்பிடம் பெறுவது மாரியம்மன் சடங்காகும். இது அம்மன் சடங்கில் தனியிடம் வகித்திருந்தது. மாரியம்மன் பற்றிய ஒரு முதுமொழியை இங்கு நோக்குவதும் சாலச்சிறந்தது. "காய்களில் மலிந்தது கத்தரி மட்டக்களப்பில் மலிந்தது மாரியம்மன்" எனுமளவிற்கு இச்சடங்கு மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்திருந்தது. மாரியம்மனுக்கு சடங்கு செய்து கன்னிமார் வைத்து தண்ணிச் சோறு பள்ளயம் செய்து வழிபடல் மரபாகக் காணப்பட்டது. கன்னிமார் 7 அல்லது 9 பேர் தெய்வம் ஆடுவோரால் இனங் காணப்பட்டு அவர்களை கோயிலில் தங்கவைத்து தீர்த்த இறுதி நாள் அன்று அவர்களுக்குப் படையல் போட்டு பெரிய அளவில் பலகாரம் படைத்து சாப்பிடப் பண்ணுவர். பின் கோயில் தலைவரின் மனைவி கன்னிமாரைப் பார்த்து "சுகம் தந்தையா" என கேட்பார் அதற்கு கன்னிமாரும் "ஓம்" எனக் கூறுவர்.

இதனைத் தொடர்ந்து பூசாரி 'காவியம்' பாடி மாரியம்மன் தாலாட்டுப் பாடி பெட்டி நிறைய வேப்பிலை, தாமரைப்பூ என்பன வைத்து ஒவ்வொருவராகக் கூப்பிட்டு பூவையும் பத்திரத்தினையும் அள்ளிக் கொடுத்து "தாயே மாதாவே ஊரைக் காப்பாற்று" எனப் பூப்போட வைப்பார். இன்று இம்மரபினை கோறளைப்பற்றுப் பிரதேச மாரியம்மன் சடங்கில் காண்பது அரிதாகி விட்டது. தண்ணிச்சோத்துப் பள்ளயத்திற்குப் பதில் சர்க்கரை அமுதே படைக்கப்படுகிறது. இம்மாற்றம் சமூகத்திற்கு வந்த கேடாக உணரப்படுகிறது.

மட்டக்களப்புப் பிரதேசம் மாந்திரிக செயற்பாட்டுக்குப் பேர் போனதாகும். இதனால்

மட்டக்களப்பு மாந்திரிகர்களுக்கு ஏனைய பிரதேச மாந்திரிகர் அச்சப்படுவர். இவ்வாறான ஒரு காலகட்டத்தில் கோறளைப்பற்றுப் பிரதேசத்தில் காணப்பட்ட ஒரு மாந்திரிகச் செயல் 'மகுடி' எடுத்தலாகும்.

மகிடி எடுத்தல் என்பது ஒருவரின் வீட்டு வீதியின் முன்பக்கம் அதாவது வீட்டினுள் பிரவேசிக்க வரும் முன் கதவுப் பக்கம் ஒரு கும்பம் வைத்து கும்பத்தில் ஒரு கயிற்றினைக் கட்டி அது வெளியில் தெரியாதபடி முற்றத்து மணலினுள் நாட்டு வைத்தல், அத்தடயம் தெரியாமல் இருக்க கமுகு மரம்வெட்டி பிளந்து இரண்டு பாதியையும் அக்கயிற்றின் மேல்பக்கம் கவிழ்த்து வைத்துவிட்டு பின், வீதியால் மகிடி உடைக்க என அழைத்து வரப்படும் மலையாளத்தானும் அவன் மனைவியும் மனைவியின் தம்பியும் வரும்போது மறைத்து வைத்த கயிற்றினை வீட்டுக்குள் இருந்து இழுக்கும்போது வீதி ஓரத்தில் உள்ள கும்பம் அசைய ஆரம்பிக்கும். இதனைப் பார்த்த தமிழ்நாட்டு மலையாளத்தவர்கள் கும்பம் தானாக அசைவதாகவும் ஏதோ மாந்திரிக மந்திரச் செயல் இடம்பெறுவதாய் எண்ணி பயந்து ஓடுவது மரபாகவே அந்நாளில் காணப்பட்டது. இந்நிகழ்வு இன்று வழக்கொழிந்து விட்டமை குறிப்பிடத்தக்கது.

மாந்திரிக செயல்களால் நோய்களைக் குணப்படுத்திய பிரதேசமாகத் திகழ்வது கோறளைப்பற்றாகும். காய்ச்சல், வயிற்றுவலி, விஷக்கடிகள் என்பன மாந்திரிக முறை மூலம் நீக்கப்பட்டுள்ளன. உதாரணம்: கோறளைப்பற்றில் வசித்த பழனி என்பவரின் தந்தையார் நோய் என வருவோர் அனைவரது நோய்களையும் மந்திரம் கூறி இல்லாது ஒழித்து சுகமாக்கியுள்ளனர். இதில் ஒன்று அட்சிரம் கீறி நோய் இறக்கலாகும்.

நிலத்தில் அட்சிரம் ஒன்று கூறி அதிலே நோய் என வருவோரை இருத்தி "சிவாயநம" எனத் தொடங்கி மந்திரம் உச்சரித்து "பூமியில் இருந்து இறங்கிப் போகவே சுவாகா" எனக் கூறி முடிய நோய்களும் இல்லாமல் போன வரலாறு இங்கு தனித்துவம் மிக்கதாகும்.

மாந்திரிக மந்திர முறைகள் மூலம் விஷக்கடி மருத்துவங்களும் மேற்கொள்ளப் பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்து எமது பிரதேசத்தில் காணப்படுகின்ற நாட்டார் பாடல்கள் சம்பந்தமான ஒருசில கர்ண பரம்பரைக் கதைகளையும் சில நாட்டார் பாடல்களையும் பார்ப்போமானால், இரண்டாம் மகாயுத்தத்திற்கு முன்னதான காலப்பகுதியில் பிரித்தானியர் ஆட்சியில் கல்குடா ஒரு துறைமுகமாக இயங்கியது. கல்குடாவிற்கு கப்பலில் பல பொருட்கள் கொண்டு வரப்பட்டு இங்கிருந்து அப்பொருட்கள் கொழும்பு, கண்டிப் பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டன. இவ்வளவு நடைபெற்ற செயல்களையும் கப்பல் வந்து தங்கிச் செல்லும் நிகழ்வுகளையும் பேத்தாழை, வாழையூர் மக்கள் செயற்பாடாகச் செய்து காட்டி நாட்டார் பாடல்களை இயற்றிப் பாடியதான செய்திகள் அதிகம். இவ்வாறான ஒரு பாட்டினை நாம் இங்கு நோக்கின்,

"கப்பலிலே ஏறி நோனா முப்பது நாள் ஆச்சு
காற்றுப்படாமல் நோனா வேர்த்துப் போனாவாம்
நேற்று வந்தாவாம் நோனா வேர்த்துப் போனாவாம்
பத்துப் பணத்துக்கும் பத்தரைச் சல்லிக்கும்
பம்பையை வித்தாவாம்
சுட்ட கருவாடாம் பறங்கிக்கு
சோறும் இறங்காதாம்
எப்படித் தின்றாலும் பறங்கியின்
சூத்தெல்லாம் பீ நாத்தம்"

என்ற பாடல் பறங்கியின ஐரோப்பியரைக் கிண்டல் பண்ணுவது போல நகைச்சுவையாக அக்காலப் பேச்சு மொழியிலே கானாப் பாடல் வகையில் எதுகை, மோனை சந்தங்களோடு அழகாகப் பாடப்பட்டு வந்துள்ளமையை அறிய முடிகிறது.

குறவர்களது பாரம்பரியத்தினை எடுத்துக் கூறும் பாடலாக,

"குண்டு இடுக்கி குடுகு இடுக்கி
கூட கையில் ஏந்தி
குனிந்து நின்று பழம் பொறுக்கும் குறத்தியடி
அம்மே
இடுக்குப் பெட்டி தனை இடுக்கி
சங்கு வடம் பூண்டு
இரு காதும் தோடணிந்து வாற குறமகளே"

எனப்பாடி ஆடுவதும் குறிப்பிடத்தக்கது. மேலும் சில நாட்டார் பாடல்கள் வழக்கில் இருந்துள்ளன. அவையும் நகைச்சுவை ததும்பும் பாடல்களாகவே காணப்பட்டுள்ளது.

"காக்காக் குஞ்சுக்குக் கலியாணம்
காறுல போகுது பலகாரம்
வேப்பம் சுள்ளி மாப்பிள்ளை
வெக்கம் கெட்ட பொம்பிளை
வெத்தல தாறன் சப்புங்கோ
வேலிக்கங்கால துப்புங்கோ"

என்ற பாடலையும் இங்கு குறிப்பிடலாம்.

அடுத்து, நாட்டாரியல் அம்சங்கள் பிரதிபலிக்கக் கூடிய இடமாக தொழிலும் அதுசார்ந்த பின்புலமும் விளங்குகின்றது. தொழில் தனி மனித வாழ்க்கைக் கூறாகும். அக்காலத் தொழில்முறையில் பிரதானமானது மீன்பிடித் தொழிலாகும். ஆற்றுப் பிரதேசங்கள் கோறளைப்பற்றில் அதிகம் காணப்பட்டமையும் மக்களின் பிரதான தொழிலாகவும் இது அமைந்தது.

இன்று எம் இளம் தலைமுறையினருக்கே தெரியாத சில மீன்பிடி முறைகள் கோறளைப்பற்றுப் பிரதேசத்தில் நிலவியது. அவற்றில் 3 முக்கியமானவை. அதில் ஒன்று 'சூல்' எனும் முறை நடுத்தோணியில் முக்காலி கட்டி அதில் மண் சட்டியை வைத்து கீழே முதிரைச் சிராயில் பற்றவைத்து அவ்வெளிச்சத்தில் மீன்பிடித் தோணியின் இரு மருங்கிலும் சீலை ஒன்றில் மீன் செய்து தோணிக்குப் பக்கத்தில் போட்டால் அதனைக் கண்டு ஏனைய மீன்கள் ஓடிவரும் போது மண்டா எறிந்து மீனினைப் பிடித்தல். இரண்டாம் முறை வில் அம்பு போடல் ஆற்றோரமாய் உள்ள கண்ணாமரத்தில் ஏறியிருந்து அம்பு எறிந்து மீனினைப் பிடிக்கும் மரபும் காணப்பட்டது. இதற்குப் பேர்போனவராக பேத்தாழையில் வசித்தவரான 'வெள்ளையர்' என்பவரைக் குறிப்பிடுவர்.

மற்றைய முறை சாரு வைத்தலாகும். ஆழமான இடத்தில் கூடுகட்டி கரையின் இருமருங்கிலும் காலை கட்டி அதாவது தாய்க்காலை புள்ளக்காலை என இரண்டு கட்டி அதில் இருந்து வேலி போன்ற அமைப்பு ஒன்று கட்டி கரைக்குக் கொண்டு போய் விடல். அவ்வாறு விட்டவுடன் அவ்வேலியைப் பிடித்து மீன்கள் காலைக்குள் சென்று தங்கியவுடன் அவற்றைப் பிடித்தலாகும். இவ்வாறு மீன்பிடித் தொழிலில் மட்டுமின்றி, பிரதேச மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பல தொழில் முறைகளிலும் கோறளைப்பற்று பிரதேசத்தின் தனித்துவத்தைப் பறைசாற்றக் கூடிய பல நாட்டாரியல் அம்சங்கள் நிறைந்திருப்பதைக் காணமுடியும்.

அடுத்து, கோறளைப்பற்றுப் பிரதேசத்தில் பண்டிகைகளின் போது இடம்பெற்று வந்த சில அம்சங்களைக் காண்போமாயின் அவற்றுள், புதுவருடப் பிறப்பு நேரத்தில் பல வேடிக்கை பொழுதுபோக்கு நிகழ்வுகள் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

ஊஞ்சல் போட்டாடல், கோடு கச்சேரி நடாத்துதல், விளையாட்டுக் கல்யாணம் பேசல், கூத்தாடல் என பல்தரப்பட்ட நிகழ்வுகளும் நடைபெற்றுள்ளன.

கோடு கச்சேரி எனும் நிகழ்வானது ஒரு பிரதான இலக்கியத்தில் இருந்து பிரதானமான வழக்கொன்றினை எடுத்து வழக்காடுவது போன்ற நாடக அமைப்பு இடம்பெறும். உதாரணமாக துரியோதனன் துயில் உரிந்த வேளையில் நடைபெற்ற நிகழ்வுகள் வழக்காடப்படும். வழக்கறிஞர் கேள்வி கேட்டால் அதற்கு நையாண்டிப் பாஷையில் பதில் கூறப்படும். இது ஒரு நகைச்சுவை நிகழ்வாக இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுபோன்ற ஒரு நகைச்சுவை நிகழ்வே விளையாட்டுக் கல்யாணம் பேசுதல். வருடப் பிறப்பில் நடைபெறும் பெண்ணுக்குத் திருமணம் முடிக்க மாப்பிள்ளை கேட்டு பெட்டி கொண்டு போகும் நிகழ்வில் கொழுக்கட்டைப் பெட்டி என்பதற்குப் நெல்லுப்போடும் 'கடகம்' என்றழைக்கப்படும் ஓலைப் பெட்டிக்குள் உழுவதற்கு பயன்படுத்தப்படும் 'கொழு' கம்பினை வைத்து கொழுக்கட்டைப் பெட்டி எனத் தூக்கிச் செல்வதும் மாப்பிள்ளை பார்க்கப் போய் சீதனம் பேசும் போது "புல்லாவியில் பத்து ஏக்கர் வயல்நிலம் என பயன்படாத தரிசு நிலங்களைச் சீதனம் பேசி முடிப்பதும் புதுவருடப் பிறப்பில் நடைபெறும் கேளிக்கை நிகழ்வுகளாகும்.

மேற்கூறப்பட்ட சில நாட்டாரியல் விடயங்கள் கோறளைப்பற்றுப் பிரதேசத்தில் பண்டைக் காலத்தில் வழக்கில் இருந்து வந்தாலும் இன்று இவை எவருக்குமே தெரியாதளவு மருவி வழக்கொழிந்து விட்டது. இருப்பினும் இவ்வாறான விடயங்களைத் தேடிப்பெற்று ஆவணப்படுத்துவது காலத்தின் கட்டாய தேவையாகும். அவ்வகையில் தான் சில விடயங்களை இங்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளன. எனினும் இத்தகவல்கள் பெறுவதில் சிரமம் காணப்பட்டது. இருப்பினும் இயன்றளவு சில விடயங்களைத் தொகுத்து தந்துள்ளேன்.

# பாராட்டிப் பழகுவோம்

'பாராட்டுதல்' - என்பது மனித குணங்களில் உன்னதமானது! பாராட்டை விரும்பாத மனிதர்கள் எவரும் இல்லை. பாராட்டுபவர் - பாராட்டப்படுபவர் இருவரின் நிலையையும் பாராட்டு, உயர்த்தக் கூடியது! பாராட்டுரையைத் தலைசிறந்த 'கிரியா ஊக்கி' - என உளவியலாளர்கள் உறுதிபடச் சொல்லுவர்.

பாராட்டுதல் பலவகைப்படும். ஒரு சிறிய புன்னகை மூலம் அங்கீகரிப்பது முதுகில் தட்டிக் கொடுப்பது; கைகளைப் பிடித்துக் குலுக்குவது; வார்த்தைகள் மூலம் முகத்துக்கு நேராகப் புகழுவது - மெச்சுவது; இவை எல்லாமே பாராட்டின் பலவகைதானே!!

படிப்பதில் இடறிவிடும் மாணவன் பின் முயன்று முதலிடம் பெறுவதும், சோம்பல் கொண்ட ஊழியர் சுறுசுறுப்படைந்து பணியில் சிறப்பதும் பாராட்டின் சாதனையாகும். வெற்றியாளர்கள் எவரை எங்கு, எப்போது பார்த்தாலும் தானாக முன்சென்று மனமுவந்து தாராளமாகப் பாராட்டுவார்கள்! இந்தப் பாராட்டு மொழி என்பது, பல விந்தைகளைச் செய்து நம்மை வியக்க வைக்கிறது. ஆம்! சமூகத்தால் கவனிக்கப்படுகிறோம் என்பதையும், அங்கீகரிக்கப்படுகிறோம் என்ற எண்ணத்தையும் பாராட்டப்படுபவரின் மனதில் இது விதைத்து விடுகிறது. விளைவு? அவரது ஆற்றல்களும், திறமைகளும் மேன்மேலும் வளர்கிறது! தன்னம்பிக்கை தானே தழைக்கிறது!!

பாராட்டப்படாதவரின் அறிவும், ஆற்றலும் சுருங்கிப் போகிறது. மனச்சோர்வும் உண்டாகிவிடுகிறது. பாராட்டுகளால் நட்பும், உறவும் பலப்படுகிறது. அன்பு வெளிப்படுகிறது. நல்வாய்ப்பு அதிகரிக்கிறது. பிறர் பாராட்டில் மனம் மகிழாத மனிதர் எவருமில்லை என அடித்துச் சொல்லலாம்! சின்னச் சின்ன செயல்கள் செய்தாலும் பாராட்டுவது அவசியம். அதன்மூலம் பெரிய செயல்களைச் செய்ய ஊக்கப்படுத்திட முடியும். பாராட்டுவதைத் தள்ளிப் போடவோ, காலம் கடத்தவோ கூடாது. பாராட்டுவதை உடனே செய்ய வேண்டும். பாராட்டுவதில் தயக்கம் காட்டக்கூடாது. நம்மைச் சுற்றி உள்ளவர்கள் தேர்வில் வெற்றி பெற்றாலும், தேர்தலில் வெற்றி அடைந்தாலும், வியாபாரத்தில் முன்னேற்றம் அடைந்தாலும், இசை, கவிதை, கட்டுரை, பேச்சு, ஓவியம், நடனம் என நுண்கலைகளில் சாதித்தாலும், நாம் மனமுவந்து அவர்களைப் பாராட்டி விட வேண்டும். அப்படிப் பாராட்டும் பண்பைப் பெற்றிருக்க வேண்டும். வளர்த்துக் கொள்ளவும் வேண்டும்.

குறை கூறி வளர்க்கப்படும் குழந்தை குற்ற மனப்பான்மையுடனும், தாழ்வு மனப்பான்மையுடனும் வளர்கிறது. பாராட்டி வளர்க்கப்படும் குழந்தை புத்திசாலியாகவும், தன்னம்பிக்கைப் பண்பில் சிறந்தாகவும் வளர்கிறது.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஓயாமல் திட்டிக் கொண்டும், குறை கூறிக் கொண்டும் இருந்தால், அந்தப் பிள்ளைகளின் அறிவு வளர்ச்சி மழுங்கிப் போய்விடும். சில நேரங்களில் அவர்களை விரக்தி மனம் கொண்டவர்களாக மாற்றிவிடும். மாறாகப் பிள்ளைகளைப் பெற்றோர்கள் தட்டிக் கொடுத்து, அவர்கள் திறமையைப் பாராட்டிட வேண்டும். இடை இடையே அன்பு மொழிகளால் கண்டித்து வளர்த்தால், பிள்ளைகளின் மனதில் தன்னம்பிக்கை தானே துளிர்விடும்! சாதனைகள் செய்திடத் தூண்டுகோலாய் அப்பாராட்டு அமையும். என குழந்தை மருத்துவ நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். மொத்தத்தில், பாராட்டுரைகள், நம்பிக்கையை வளர்க்கும்; பாதுகாப்பு உணர்வைப் பெருக்கும்;; கற்பதைத் தூண்டும்; நல்லெண்ணத்தை மனதில் பதியமிடும்; பிறருக்கு உதவும் மனப்பாங்கை ஏற்படுத்தும்; மனித நேயத்தை ஊட்டும்; மானிட உறவுகளைத் தழைத்தோங்கச் செய்யும்!

பிறருடைய நிறைகளைப் பலர் முன்னிலையில் பாராட்ட வேண்டும். குறைகளையோ, தனிமையில் நாசுக்காகச் சுட்டிக்காட்ட வேண்டும். சமுதாயத்தில் பாராட்ட வேண்டியவர்களை, நாம் பாராட்டத் தவறினால், நல்லது செய்வதற்கான மனம் படைத்தவர்கள் சற்று ஒதுங்கி விடும் சூழல் ஏற்படும். எனவே, நல்ல செயல் புரிபவர்களை உடனடியாகப் பாராட்ட வேண்டியது மிக மிக அவசியமாகும். 'பணம் செய்யாததைப் பாராட்டு செய்யும்' - என்பது புதுமொழி. பாராட்டுகளைப் பெற்றவர்கள் மீண்டும், மீண்டும் பாராட்டைப் பெற வேண்டும் என்ற உந்துதலால் தங்கள் பணிகளை மேலும் சிறப்பாக செய்வார்கள்! இது, நிர்வாக மேலாண்மைத் துறையினர் ஆய்வு செய்து கண்டுபிடித்துள்ள அப்பட்டமான உண்மை!

நமது குடும்பத்தினர், குழந்தைகள், நண்பர்கள், உடன் பணிபுரிவோர் என அனைத்து நிலையில் உள்ளவர்களையும் நாம் பாராட்டிப் பழகுவோம். மனித உறவுகளை மாண்புற வளரும்படி செய்வோம்!

## பேசும் புத்தகங்கள்

கவிஞர் வைரமுத்து எழுதிய 'இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல' என்பது ஓர் அருமையான கவிதைத் தொகுதி. அதில் 'புத்தகப் புராணம்' என்ற தலைப்பில் பாடும் போது வைரமுத்து பாடுவார்.

"உயிரின் சுவாசமல்லவா புத்தகம்?
உனக்குள் ஒரு சூரியன் அல்லவா புத்தகம்?
அட்டையிட்ட அமுதமல்லவா புத்தகம்?
உனக்கு வரம் தர யாரோ இருந்த
தவமல்லவா புத்தகம்?" புத்தகங்களின் பெருமை பற்றி, பல்வேறு அறிஞர்களும் புகழ்ந்து பேசி இருக்கிறார்கள், "ஒருவர் வாசிக்கும் புத்தகங்களை எவை எனக் கூறுங்கள், அவர் எப்படிப்பட்டவர் என்பதைச் சொல்கிறேன்" என்றார் பெட்ரண்ட். "புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிகளை விடப் பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே" என்று லெனின் முழக்கமிட்டார்.

வாசிப்புக்கு இலக்கணம் வகுத்த ஆங்கில அறிஞன் ப்ரான்சிஸ் பேக்கன் கூறுவான். "சில புத்தகங்களைச் சுவைப்போம்... சிலவற்றை அப்படியே விழுங்குவோம்... சில புத்தகங்களை மென்று ஜீரணிப்போம்..."

அமெரிக்காவில் நீக்ரோக்கள், கருப்பர்கள், மாடுகள் போல விலைக்கு விற்கப் படுவதைக் கண்டு மனம் கொதித்தார் இளைஞனாக இருந்த ஆபிரகாம் லிங்கன். இவர் அமெரிக்காவின் ஜனாதிபதியானதும் இந்த கொடிய பழக்கத்தை ஒழித்தார்.

நீக்ரோக்களுக்கு ஆதரவாக அவர்களின் வேதனையைப் பிழிந்தது ஹெரியட் பீச்சர் என்கிற பெண் நாவலாசிரியை எழுதிய ""Uncle Tom's Cabin" என்கிற சமூகச் சீர்திருத்த நாவலாகும். அடிமை வணிகத்தை ஒழித்த ஆபிரகாம் இந்தப் பெண்மணியைச் சந்தித்துப் பாராட்டிப் புகழ்ந்தார். இதுவன்றோ புத்தகத்தின் வலிமை! இருபத்து மூன்று வயதிலேயே விடுதலைக்காகத் தூக்குக் கயிற்றை முத்தமிட்டார் மாவீரன் பகத்சிங். அவர் எழுதிய "நான் ஏன் நாத்திகன் ஆனேன்" என்ற நூல் இந்தியாவில் புரட்சிக்கு வித்திட்டது.


பகத்சிங்கின் நூலை மொழிபெயர்த்து வெளி யிட்டதற்குப் பொதுவுடைமைப் போராளி ஜீவானந்தத்திற்கு ஆறு மாதச் சிறை தண்டனை கிடைத்தது.

லாகூர் சதி வழக்கில் ஆங்கில நீதிமன்றம் மாவீரன் பகத்சிங்குக்குத் தூக்குத் தண்டனை அளித்தது. சிறை அதிகாரி தூக்கில் போட அழைக்க வந்த போது பகத்சிங் லெனின் வரலாற்றைப் படித்துக் கொண்டிருந்தார். சிறை அதிகாரியிடம் பகத்சிங், 'நான் புரட்சிவாதி... மற்றொரு புரட்சிவாதியிடம் விவாதித்துக் கொண்டிருக்கிறேன். சிறிது பொறுங்கள்' என்றார்.

ஆதலால் புத்தகங்களை நேசிப்போம்.
புத்தகங்களை வாசிப்போம்.




"ஏட்டிலே கவிபுனைந்து சங்கம் வைத்து தமிழ் வளர்த்த காலமது போய் - இன்டர்
நெட்டிலே தமிழ்பிசைந்து உலகுக்கு ஊட்டிவிடும் காலமிது! – எங்கள்
நாட்டிலே தமிழ்பாடும் நல்லுள்ளங்கள் விதைத்த கவிமணிகளை - இங்கு
மீட்டியே நாம் பதிந்தோம் நன்றியுடன் அவர் பேர்சிறக்க! தமிழ் பணி பெருக்க"



கவிஞர்

# தமிழூராள் அனுஷ்திக்கா




தமிழூராள்
அனுஷ்திக்கா

யான் தமிழ்பித்து
"தமிழே என் உயிர்
அதுவே என் திமிர்"
"எழுத்தே என் ஊழியம்
எழுதுகோல் அதன் ஆயுதம்"
என தன்னைத்தானே
அறிமுகம் செய்து
கொள்வதில் ஆரம்பிக்கிறது!
இவரது கவித்தமிழ்!
முகநூல் கவிஞர்கவிடையே
பிரசித்தி பெற்ற கவிதை
குழுமங்கள், குழுக்கள்
நடத்துகின்ற கவிதைப்
போட்டிகளில் பங்கேற்று
சான்றிதழ்களை நிறைக்கும்
கவிதைத் திமிரி.
தமிழோடும் நட்பு!
கவிதைத் தமிழர்களோடும்
நட்பு!
என முகநூலில்
கவித்தமிழில் கலக்கி வரும்
நம் சொந்தம் இவர்.
பெண் அழகு பாடும் தமிழில்
மண் அழகும் பாடுகின்றார்
– சிலநேரம்
தமிழர் படும்பாடும்
பாடுகின்றார்!
பெண்ணே! எழுது! உன்
ஆகாயங்கள்
தாண்டி உன் தமிழும் நீயும்
அடையாளமாய்
வாழ்த்துகின்றோம்.

## வறுமையின் கொடுமை

***************************

காசில்லாது கடுந்துயர்
கருக்குகிறது மனதோரம்
யாசகம் கேட்டிடவும்
யாருமில்லாத் தெருவோரம்

சுடும் வெயிலில்
அவிகின்றன பாதங்கள்
கடும் பசியில்
வாடுகின்றன வதனங்கள்

ஏழ்மை ஏனோ
ஏறுகின்றன எம்மில்
வாழ்வு வலிக்கிறது
துன்ப அம்பில்

கடுமையாய் வாழ்வு
காலங்களைச் சுருக்குகிறது
கொடுமையான நிமிடங்களை
ஆயுள் வெறுக்கிறது




## இதய வீணை

இதய வீணை
இயங்க மறுக்குது!
உதய ராகம்
உறங்கிக் கிடக்குது!
சதையில் ஏதோ
சதிகள் இருக்குது!
புதைந்தே உயிரும்
தன்னை மறைக்குது!

சங்கீதச் சத்தங்கள்
நிசப்தம் அணியுது!
அங்கங்கள் எங்கும்
கசப்பு சுரக்குது!
பொங்கிடும் எழிலும்
பாசாங்கு காட்டுது!
சங்கடங்கள் கூடி
கவலைகள் அலையுது!

வீணையின் நரம்புகள்
பிய்ப்பட்டு துடிக்குது!
இணையின் இழப்பு
இதயம் கனக்குது!
அணை யுடைத்து
கண்ணீர் பெருகுது!
கணையாய் கவலை
வீணையில் குத்துது!

பிரிவால் இசையை
மீட்ட மறுக்குது!
புரிவார் இன்றி
புலம்பல் பறக்குது!
விரியும் வாயுவில்
விஷமும் ஏறுது!
சரிந்தே வீணை
மெல்ல இறக்குது!

## எழுத்தாணியோடு எழுவோம்


தாழ்வின் நிலையைத்
தடுத்திடும் ஆயுதம்
வாழ்வின் நிலையை
வளப்படுத்தும் மந்திரம்
காழ்புணர்ச்சியை வேரோடு
களையெடுக்கும் இயந்திரம்
வீழ்வை நிறுத்திடும்
வீரத்தின் தந்திரம்

ஆயிரம் துப்பாக்கிகளால்
அழிந்தன போதும்
வயிற்றைப் பிய்த்திடும்
வாள்கள் வேண்டாம்
கயிறாய் நெறித்திடும்
கடுந்துயர் வேண்டாம்
உயிரைப் பறித்திடும்
ரசாயனமும் வேண்டாம்

கையில் பிடித்துக்
கருத்தைப் பெருக்கி
வையக அரசியலைக்
கையகத்தே அடக்கி
மையில் துடிக்கும்
ரத்தத்தைப் பாய்ச்சி
கைமாறாய் மீட்பைப்
பிடுங்கி எடுப்போம்

உரிமை வேண்டி
உடலைச் சிதைக்காமல்
கத்திகளை உடைத்துப்
புத்தியைக் கூராக்கி
நித்தமும் எழுத்தாணியை
கைகளில் ஏந்துவோம்
வித்தைகள் புரிவோம்
விரைவாய் எழுந்து...



சடலங்களை அடக்கக்கூட
குழி தோண்ட
அச்சமாக இருக்கிறது!
அதிசயத்தைப் பாருங்கள்!
அகழும் இடமெல்லாம்
புத்தர் சிலைகளாம்!

வேசி என்று இகழும்
நாகூசும் சொல்தந்த தமிழே!
பலரோடு படுத்துறங்கும் ஆண்
உன் கண்ணுக்குத்
தெரியாதது ஆச்சரியம்தான்!
ஓடுகாலி என்றோர்
பெயரிட்ட தமிழே!
மனைவி, பிள்ளை
விட்டோடியவனை நீ
மறந்தது வேடிக்கைதான்!
வாழாவெட்டி என்று
முத்திரையிட்ட தமிழே!
துணைவியைக் கைவிட்ட
கணவனை நீ
கண்டுகொள்ளாதது
விந்தைதான்!
திருமணமாகாப் பெண்ணை
முதிர்க்கன்னி என்ற
ஆணாதிக்கத் தமிழே!
இந்தப் பெண்பாலுக்கெல்லாம்
ஆண்பாலும் தருவாயோ!

ஈழம் என்று சொன்னால்தான்
எங்கள் கவிதைகளைப்
படிக்கிறார்கள்.
சிதறிய அங்கங்களை
சித்தரித்தால்தான்
ஆர்வமாக வாசிக்கிறார்கள்.
சிங்களவரைத் திட்டினால்தான்
கைதட்டி ஆர்ப்பரிக்கிறார்கள்.
அகதியாய் அலைந்ததைச்சொல்ல
அருமை என்கிறார்கள்.
வரியுடை போற்றியெழுத
பொன்னாடை போர்த்துகிறார்கள்.
தவறுகளைச் சொன்னால் மட்டும்
துரோகி என்கிறார்கள்!

அருவியில் மூத்திரம் பேய்ந்து
அதிலே வாயும் கொப்பளிப்பார்!
மலம் கொத்திக் கிளறும்
காக்கைகளாய் தீனிதேடுவார்!
முகம் சுழிக்காதீர்கள்! அருவருக்காதீர்கள்!
எங்கள் அரசியல்வாதிகள்
எல்லோரும் இப்படித்தான்!
இந்த வேற்றுக்கிரகவாசிகள்
ஐந்தாண்டுக்கொரு முறை எங்களூருக்கு வருவார்கள்!
பாலில்லாக் கொங்கைகளைக் கசக்கிப் பிழிவார்கள்!

குருதி வடிந்தாலுமென்ன குடித்துப் பசியாறி
கொட்டாவி விடுவார்கள்!
அசதியில் தூங்கியெழும்ப ஐந்தாண்டுகள் கடக்கும்!
மீண்டும் வருவார்கள்!
வறண்ட நாவோடு எங்களூர்ச் சனங்கள்
குடி நீருக்குக் காத்திருக்கும்!
போத்தலில் அடைக்கப்பட்ட
குடிபானமென்ன! சிற்றுண்டியென்ன!
அவர்களின் தாகமும் பசியும் அடங்கும்!
எங்களூர்ச் சனங்களோ
ஒட்டிய வயிறோடும் வறண்ட நாவோடும்
வீடு திரும்புவார்கள்!
ஒற்றைப் புள்ளடிக்காக
வித விதமாகச் சின்னங்கள்!
வகை தொகையாக பொய்யும் புரட்டும்!

குண்டுகள் எறிகணைகள் குத்திக் கிழித்த நிலத்தை
இரும்புக் கம்பிகள் ஊடுறுவச் செய்து
மேடையமைக்கிறோம்!
அதுவும் அவர்களுக்காகத்தான்!
மாறி மாறி ஏறுவோரெல்லாம்
சுதந்திரமாம் தமிழினமாம்
மொழிப்பற்றாம் நிலமீட்பாம்
ஏதேதோ சொல்வதைக்
கேட்டுக் கேட்டு
எங்கள் காதுகளுக்கும் சலித்துவிட்டது!
அந்தக் குண்டுகள் அன்றே கொன்றன!
இவர்களோ மெள்ளக் கொல்கிறார்கள்!
எப்படியும் சாவதென்னவோ
எங்களூர்ச் சனங்கள்தான்!



## கிரிஷாந்த் ராஜ்

எனும் பெயரில் உள்ள தனது முகநூலில் சமூகக் கவிபாடும் இவரை ‘இளைய பாரதி’ எனலாம். அவ்வளவு வீச்சான சிந்தனையும் கூர்மையான சொற்களும் கொண்டு கவிபடைக்கும் ஆற்றல் மிகுந்த தமிழன்.

தொழிலாக ஊடகத்துறையினை வரித்துக் கொண்டு அதன்பால் தன் திறமைகளை நாடறியச் செய்து பல்வேறு விருதுகளையும் பெற்றுவரும் இவர், சிறந்த பேச்சாற்றலும் நிறைந்த சிந்தனையாற்றலும் கொண்டவராகத் திகழ்வதனை இவரது கவிதைப் பதிவுகள் நமக்குப் புலப்படுத்துகின்றன.

சமூகத்தில் நடக்கின்ற அவலங்களை எள்ளி நகையாடி நமக்கும் உறைக்கும் படியாய் தன் உணர்வுகளை கடத்துகின்ற சூட்சுமம் அறிந்த இந்தக் கவிஞனின் கவிப்பணி தொடரவும்! தமிழ்த்தாயின் பாதங்களில் இவன் கவியும்! நல்லாபரணமாய் திகழ்ந்து புகழ்சூட வாழ்த்துவோம்!



# இலங்கைத் தமிழ் சிறுகதைகள் 01

**இப்பகுதி மூலம் இலங்கைத் தமிழ்ப் படைப்பாளிகளின் படைப்புக்களில் வாசகர்களால் மிகவும் விரும்பப்பட்ட சிறுகதைகள் தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளன. அவ்வகையில் முதல் இதழில் ஈழத்தின் சிறுகதை மூலவர்களில் ஒருவராகப் போற்றப்படும் இலங்கையர்கோன் அவர்களின் 'மச்சாள்' எனும் சிறுகதை எமது வாசகர்களுக்காக நன்றியுடன் பிரசுரிக்கப்படுகின்றது.**

**இலங்கையர்கோன் என்ற பெயரில் எழுதிய த. சிவஞானசுந்தரம், செப்டம்பர் 6, 1915 - அக்டோபர் 14, 1961) ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளுள் ஒருவர். தமிழில் சிறுகதை தோன்றி வளர்ந்த காலத்தில் அதன் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பு செய்தவர்களில் ஒருவர் என்று பாராட்டுப் பெற்றவர். இவர் விமர்சனம், நாடகம் ஆகிய துறைகளிலும் ஈடுபாடு காட்டினார்.**

# மச்சாள்

என் எட்டு வயதின் ஆச்சர்யத்தால் அகன்ற கண்களுடன் பார்க்கும் பொழுது இருபது வயது கடந்த என் மைத்துனியைப் போல அழகான பெண் இந்த வையகத்தில் இருக்க முடியாது என்றே தோன்றிற்று.

ஹெலன், சீதை, கிளியோப்பாற்றா முதலிய உலகப் பிரசித்தி பெற்ற அழகிகளைப்பற்றியெல்லாம் அந்த வயதிலேயே கேள்வியுற்றிருந்தேன். அவர்கள் எல்லாம் என் மைத்துனியிடம் பிச்சை வாங்க வேண்டும்; அல்லது அவர்கள் எல்லாருடைய அழகையும் வேடிக்கை பார்க்கும் உரு விதி சேர்த்து சமைத்து விட்ட ரூபமோ அவள்! பளிங்குக் கன்னங்களின் மேல் பதறிச் சிறகடிக்கும் கருங்கண் இமைகள். அவைகளின் மேல் குவளையின் கருமையைச் சாறாக்கி வடித்து யாரோ ஒரு அழகுக் கலைஞன் மெல்லியதாக வளைந்து வரைந்து விட்டது போன்ற புருவங்கள். அவைகளின் மேல் வெண்பிறை நுதல் .... நான் மெய் மறந்து அவளையே கண் கொட்டாமல் பார்த்தபடி உட்கார்ந்து இருந்தேன். அவள் தன் நீண்டகருங் கூந்தலை வாரிக் கொண்டிருந்தாள். சீப்பின் பற்கள் சிதறிவிடும்படி அத்தனை அடர்த்தியாகவும் இருந்தது அவளுடைய கூந்தல்.

"என்னடா , அப்படிப் பார்க்கிறாய்?"

நான் மாங்காய் திருடுகையில் கையுங் களவுமாய்ப் பிடிபட்ட சிறுவன் போல் அலறி அடித்துக் கொண்டு எழுந்து நின்றேன். என் சேப்பில் இருந்த கண்ணாடி'மாபிள்' கள் அலங்கோலமாகச் சிமெண்ட் நிலத்தில் விழுந்து சிதறின. அத்துடன் என் கனவும் கலக்கமும் கலைந்தன.

"ஒண்டும் இல்லை."

"பின்னை ஏன் அப்பிடி என்னை விழுங்கிற மாதிரிப்பார்த்துக் கொண்டிருந்தாய்?"


" உம்மை எப்ப நான் பார்த்தனான்? அந்தச் சுவரிலை இருக்கிற பல்லியை அல்லவோ நான் பார்த்துக் கொண்டிருந்தேன்."

"இல்லை, என்னைத்தான் நீ பார்த்தாய் !"

"உம்மிலை என்ன கிடக்குது பார்க்கிறதுக்கு ! ஓகோ,அப்பிடியோ உமக்கு யோசனை?"

"ஏன்டா,நான் வடிவில்லையே?"

சிறுவனாகிய என்னுடன் எதுவும் பேசலாம் என்ற எண்ணம் போலும் அவளுக்கு; தான் அழகானவள்



என்று அவளுக்குத் தெரிந்துதான் இருந்தது. அத்துடன் அதைக் குறித்து இறுமாப்பும்......

"சொல்லேன்டா, நான் வடிவில்லையே?"

"எனக்கு அதெல்லாம் தெரியுமே?"

"இந்த வயதிலை சினிமாப்படம் எல்லாம் பார்க்கிறாய். நாவல்ஸ் புத்தகம் எல்லாம் படிக்கிறாய். இது மட்டும் தெரியாமல் கிடக்கே உனக்கு? சொல்லு மச்சான்." என்று குழைந்தாள். அவள் என்னைத் திடுக்கிட வைத்ததற்காக அவள் மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்ள முனைந்தேன்.

"அதெல்லாம் என்னை ஏன் கேட்கிறீர்? மச்சாள், என்ரை பெரியண்ணன் இண்டைக்குப் பின்னேரம் வந்திடுவார்; அவரைக் கேளும், நீர் வடிவோ வடிவில்லையோ எண்டு அவர் நல்லாய்ச் சொல்லுவார்."

"போடா! குரங்கு, சனியன் ! இனி அடிதான் வாங்கப் போறாய் என்னட்டை!"

அவள் கன்னங்கள் சிவந்தன. நாணம், கோபம், மகிழ்ச்சி எதுவோ நான் அறிந்தேனோ? அவள் தலை சீவிக் கொண்டை போட்டு விட்ட படியால், கண்ணா டியை நகர்த்தி விட்டு மான் போல் துடித்தெழுந்து நின்றாள். அவள் கையிலே நீளமான தடித்த சீப்பு இருந்தது. நான் சிறிது தூரத்தில் போய் விலகி நின்று கொண்டேன். சிறுவர்களுக்கு இயல்பாக உள்ள

சுபாவத்தின்படி, அவள் மனத்தை மேலும் கிளறிவிட முனைந்தேன்.

"சும்மா கணக்கு விடாதையும், மச்சாள் ! அண்ணன் இஞ்சை வந்தால் அறைக்கை போய் ஒளிச்சுக் கொண்டு யன்னற் சீலையை நீக்கி நீக்கிப் பார்க்கிறது எனக்குத் தெரியாதோ?"

அவள் திடீரென்று சிரித்து விட்டாள்.

"அட குரங்குக் குட்டி! உனக்கு இதெல்லாம் எப்பிடியடா தெரியும்? சரி வா, இவ்வளவு நேரமும் மாபிள் அடிச்சுக் களைச்சுப் போனாய், இனி கால் முகம் கழுவிப் போட்டு வந்து சோத்தைத் தின்!" அவள் பேச்சை மாற்ற முயன்றாலும் நான் விடவில்லை.

"அதுகும் தெரியும், இன்னும் ஒரு மாதத்தையால், என்ரை அண்ணன் உம்மைக் கலியாணம் முடிக்கப் போறார் எண்டதும் தெரியும்!"

"அட குரங்கே........!"
அவளுடைய குரலில் கோபம் இல்லை. எல்லை இல்லாத ஒரு குதூகலம்தான் தொனித்தது. தனிக் கறுப்பு வளையல் அணிந்த தன் வெண்ணிறக் கை ஒன்றை மணிக்கட்டுடன் மடித்து தன் துடி இடையில் வைத்துக்கொண்டு என்னைத் தன் அகன்ற கருவிழிகளால் உற்று நெடு நோக்கு நோக்கினாள்.

உண்மையில் என்னைத்தான் நோக்கினாளோ அல்லது தன் மனக் கண்களால் என் முகச் சாயல் கொண்டிருந்த...... ? அவள் நோக்கு எனக்குச் சங்கடமாக இருந்தது. என் கண்களைத் தாழ்த்திக் கொண்டேன்.

"மச்சாள், எனக்குப் பசிக்குது. இப்ப சோறு தாறீரா அல்லது.....".

அவள் மோனம் கலைந்தது. "வா" என்றாள் அன்பு கனிய, "முட்டைப் பொரியலும் சோறும் தாறன்......"

அவள் பெயர் கர்ணகை ; என் பெயர்...? அது இந்தக் கதைக்குத் தேவையில்லை.

என் அண்ணாவின் பெயர் சண்முகதாஸன். சுருக்கமாக எஸ்.தாஸன் என்று வைத்துக் கொண்டிருந்தார். அவர் பீ. ஏ. பாஸ் பண்ணிவிட்டு அடுத்த ஊரில் ஒரு கலாசாலையில் உபாத்திமைத் தொழில் செய்து கொண்டிருந்தார்.

கர்ணகை சிறு வயதிலேயே தாயை இழந்து விட்ட கன்னி; தந்தையின் கண்ணுட் கருமணி. அவளுக்காக அவர் மறு விவாகமே வேண்டாம் என்று சொல்லி விட்டார். அவர் என்னுடைய அம்மாவின் ஒரே தமையன். அவர் ஊர்ப் பள்ளிக்கூடத்தில் பயிற்றப் பட்ட ஆசிரியராகக் கடமையாற்றி வந்தார். அதிற் கிடைத்த வேதனம் அவர்கள் இருவருக்கும் போதுமானது. தன் மகளுக்கென அதில் மீதம் செய்து பத்தாயிரம் ரூபாய் பணமாக வங்கியில் போட்டு வைத்திருந்தார். அத்துடன் வீடும் வளவும் சிறிது வயல் நிலமும் அவருக்குச் சொந்தம்.

எல்லாம் தன் மகளுக்கு என்றே வைத்திருந்தார். எங்கள் வீட்டில் என் அம்மா வைத்தது தான் சட்டம். என் தந்தை காசு தேடும் யந்திரம்...அவ்வளவு தான். என் தாய் எங்கள் வீட்டை ஒரு சிற்றரசி போல ஆட்சி செய்த படியால் சிறு வயதில் எனக்கு என் தந்தையின் அன்பு கிடைக்கவில்லை.

அவர் எனக்கு என்றும் தூரத்துப் பச்சை...... ஏதோ காற்சட்டை, கோட், டை, சப்பாத்து, தொப்பி முதலியன காலையில் அணிவார். பிறகு மாலையில் வந்து அவைகளைக் களைந்து வைத்துவிட்டு ஒரு மலிந்த எட்டு முழ வேஷ்டியை இரண்டாக மடித்து இடுப்பில் கட்டிக் கொண்டு பத்திரிகை பார்ப்பார். சம்பள நாளன்று தம் கையிற் கிடைத்த பணத்தை என் தாய் கையில் வைத்துவிட்டு, வீட்டு விவகாரம் எதிலும் சிரத்தை இல்லாமலே இருந்து விடுவார்.
எங்களில் எல்லாமாக எட்டுச் சகோதரர்கள், பெண்கள் அறுவர், ஆண்கள் இருவர். அண்ணன் தான் எல்லாரிலும் மூத்தவர். நான் கடைக்குட்டி. இடையில் ஆறு பெண்கள். என் அக்காமார் என் காதுகளைப் பிய்த்து எடுத்து என்னைத் தங்களுடைய சேவகனாக நடத்தினார்கள். நூற்பந்து வாங்கி வா, ஊசி வாங்கி வா, சட்டைத் துணிவாங்கி வா, அது வாங்கி வா, இது வாங்கி வா என்று எல்லாம் ஏவி என்னை ஒரு அடிமைபோல் நடத்தினார்கள்.....

அதனால் நான் என் கர்ணகை மச்சாளிடம் போய் அண்டுவேன். என்னுடைய அண்ணனுக்கும் கர்ணகை மச்சாளுக்கும் கலியாணம் நடக்கப் போகிறதே, அதன் பிறகு அவள் எங்கள் வீட்டுக்கு வந்துவிடப் போகிறாளே என்று பெரியவர்கள் சொல்லக் கேள்விப் பட்டதும் என் உள்ளமெல்லாம் மகிழ்ச்சியினால் துள்ளி, என் அக்காமாருக்கு இதனால் ஒரு பாடம் படிப்பிக்கலாம் என்று எத்தனையோ குழந்தைக் கனவுகள் எல்லாம் கண்டு விட்டேன். அதற்கிடையில் என்னுடைய அண்ணன் உபாத்திமைத் தொழிலில் இருந்து ஏதோ ஒரு சோதனை பாஸ்பண்ணி ஓர் அதிகாரப் பதவிக்குப் போய்விட்டார். அன்றும் கர்ணகை மச்சாளிடம் ஓடினேன். அவள் அன்று அலுத்துப் போய் வந்த மாமாவுக்குத் தேநீர் தயாரித்துக் கொண்டி ருந்தாள். நான் அவளருகிற் போய் அமர்ந்து கொண்டேன்.

"குடிடா மச்சான், தேத்தண்ணி!"

"மச்சாள், உமக்கு ஒரு புதினம் தெரியுமா?"

"அட குடிச்சுப் போட்டு கதையன். இன்னொரு ரஷ்யாக் காரன் சந்திர மண்டலத்திற் போய் சேர்ந்திட்டானோ அல்லது, அல்லது... என்ன இவ்வளவு அவதிப்படுகிறாய்! குடியடா தேத்தண்ணியை!"

"மச்சாள், இந்தப் புதினம் கேள்விப்பட்டீரோ? தெரியாது போலக் கதைக்கிறீர். என்ரை அண்ணன் பெரிய சோதனை பாஸ் பண்ணிப் போட்டார். அவருக்கு இனிமேல் மாமாவைப் போல வாத்தி வேலை இல்லை; இனிப் பெரிய கவுண்மேந்து உத்தியோகம்."

"என்னடா சொல்லுகிறாய், குரங்கா!"

"இனிமேல் உம்மடை தேத்தண்ணி குடிக்கமாட்டேன். பெரியண்ணன் வந்து உம்மைக் கலியாணம் முடிச்சு எங்கடை வீட்டை கொண்டுவந்த அதன் பிறகு உம்மடை கையாலை ஒரு தேத்தண்ணி தந்தால் குடிப்பன். இப்ப அதெல்லாம் ஏலாது."

"போடா சனி, போடா குரங்.., போடா மூதே! இதிலே நிண்டியோ ஏப்பைக் காம்பாலை வாங்கப்போறாய் என்னட்டை!"

"என்ன மச்சாள், உமக்குச் சந்தோஷமில்லையா?"

"போடா?"

அவளுடைய மென்மையான கன்னங்கள் மறுபடி திடிரென்று சிவந்தன. அவள் குங்குமம் அணிந்திரா விட்டாலும் பிறைமதி யொத்த அந்த நெற்றி குங்குமம் போலச் சிவந்துவிட்டது. அவள் உடனே எழுந்து என் மாமாவான தன் தந்தைக்குத் தேநீரும் பலகாரமும் கொண்டு சென்றாள். வெட்கம் என்னையும் பிய்த்துத் தின்றது. நான் ஓடிவிட்டேன்.

ஆனால் அந்த மணம் நடக்கவில்லை. என் தந்தைக்கு வாய் இல்லை. என் தாய்க்குப் பணமோகம். என் அண்ணாவுக்கு ஆங்கில மோகம். இரக்கமற்ற என் ஆறு அக்காமாருக்கும் அண்ணனுடைய பதவிக்கு ஏற்ற பெண் வேண்டும் என்ற ஒரு மூட எண்ணம். ஆங்கிலப் படிப்பு, பவிசு...

ஒரு நாள் என்னுடைய அப்பா என்னுடைய அம்மாவிடம் வாதாடினார். பேசினார். எல்லாம் முதன் முறையாகத்தான், நான் அறிந்தமட்டில்! அவர் அழுதார். என் குடும்பத்தவர் எல்லோருமாகச் சேர்ந்து அவர் வாயை அடக்கிவிட்டனர். ஏழு பெண்கள் சேர்ந்து பேசும்பொழுது வயோதிபராகிய ஒரு ஆண் எம்மாத்திரம்?

அன்று என் தந்தைக்காக இரங்கினேன், உடனே கர்ணகை மச்சாளிடம் ஓடினேன். அவள் அன்று குங்குமம் அணிந்திருந்தாள். தன் நீண்ட கூந்தலை வாரி முடித்து அதிலே மணம் கமழும் மல்லிகையும் அணிந்திருந்தாள். - அது ஒரு தனி அழகு. எட்டு வயதுச் சிறுவனாகிய எனக்குக்கூட அந்த அழகு புலப்பட்டது. நான் ஒரு கணம் பிரமித்து நின்றுவிட்டேன்.

யானைத் தந்தத்தால் படைக்கப்பட்ட பதுமைபோல அவள் வீட்டு வாசலிலே நின்றாள்; அந்த வீட்டை ஆளும் திருமகள் போல நின்றாள்.

ஏதோ கூறவென்று ஓடிப்போன நான் மலைத்து நின்றுவிட்டேன்.

அவள் அதிகாரமாகவே பேசினாள்.

"என்னடா!" "ஒண்டுமில்லை மச்சாள்."

"என்ன என்னவோ கிளிச்சுக் கொட்டுகிறது போலை ஓடிவாறாய்! மாமி மச்சாள்மார் எல்லாரும் நல்லாயிருக்கினமோ?"

"ஓம் மச்சாள்!"

"என்னடா என்னவோ செத்த வீட்டுக்குச் சொல்ல வந்தவன் போலை ஒரு மாதிரிக் கதைக்கிறாய்.பொறு மச்சான்; இப்ப ஐயா வந்திடுவர். நீயும் அவரோடை இருந்து கொழுக்கட்டையும் வடையும் தின்னன்."

"ஓம் மச்சாள்."

ஆனால் நான் சொல்ல வந்ததை எப்படிச் சொல்லுவேன்? என் நா எழவில்லை. என் குழந்தை மனம் இடிந்து விட்டது.

"எனக்கு வீட்டிலை வேலை கிடக்குது மச்சாள்" என்று அழாக்குறையாகச் சொல்லிவிட்டு எடுத்தேன் ஓட்டம். என்னுடைய அண்ணனுக்கு எங்கோ ஓரிடத்தில் கலியாணம் பேசி முடித்து வைத்துவிட்டாள் அம்மா.

என்னுடைய பிறவூர் மச்சாள் வந்தாள். என்னுடைய குழந்தை மனத்திற்கு அசிங்கத்தின் சின்னமாகவே அவள் தோன்றினாள். கன்னம் கரேலன்று கொழுத்திருந்த முகத்திலே கறுத்தத் தோலை வெள்ளத் தோலாக்க முயலும் பவுடர்ப் பூச்சு, கையிலே விலை உயர்ந்த ஒரு கைக்கடிகாரம். கழுத்திலே ஒரு மெல்லிய தங்கச் சங்கிலி, அதிலே தான் தாலியும் கோத்துக் கிடந்தது. பின்னி முடிந்த கூந்தலிலே வைத்துத் தொடுத்த முடிமயிர் புறம்பாகத் தெரிந்தது. அவளுடைய இடையிலே மெலிவோ மென்மையோ இல்லை. உடலிலே அழகில்லை. குரலிலே இனிமை இல்லை. மனத்திலே அன்பில்லை..

எனக்கு உடனே வீட்டைவிட்டு ஓடி விடவேண்டும் போலத் தோன்றியது. எங்கே ஓடுவேன் நான்?

என் கர்ணகை மச்சாளிடம் ஓடினேன். அவள் என்றும் போலச் சந்தோஷமாகவே இருந்தாள்.

யாரோ ஒரு தெய்வச் சிற்பி தன் வல்லமை எல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து நன்றாக அடுக்கிவிட்ட முத்து வரிசையை வளைத்து மாணிக்கக்கரை கட்டிவிட்டது போன்று இருந்தது அவள் புன்னகை.

எதற்கும் கலங்காத வீரத்தமிழ் மகள் போல் என்னைக் கண்டவுடன் அவள் கண்கள் சிரித்தன.

"வாடா மச்சான், இஞ்சை வந்து கொஞ்சம் கலியாண வீட்டுப் பலகாரம் சாப்பிடேன்!"

"என்ன மச்சாள், எனக்கெண்டே வச்சிருக்கிறீர் எங்கடை கலியாண வீட்டுப் பலகாரம் எல்லாம்....." என் குரல் தடைப்பட்டு விம்மி நின்றது.

எனக்கு அழுகை.

"அதிலை என்னடா மச்சான்? நீ எண்டாலும் என்னைக் கலியாணம் முடிக்க மாட்டியோ?"

பகலெல்லாம் தண்ணொளியை நல்கிவிட்டு மேல் வானில் அஸ்தமிக்கும் சூரியன் போல் அவள் முகம் செக்கர் படிந்து மங்கியது. மாவலியாறு திடீரென்று பசிய கானகமெல்லாம் பெயர்த்துப் பெருவெள்ளம் கொண்டு பாய்வது போல அவளுடைய அழகிய கருங் கண்ணிமைகள் அறுந்து சிதறும்படி கண்ணீர் ஊற்றுப் பாய்ந்து புரண்டு வழிந்தது....... ஆ! அவள் மறுபுறம் திரும்பிவிட்டாள்!

எடுத்தேன் ஓட்டம்! என் கண்களிலும் கண்ணீராறு! ரத்த ஆறு நெருப்பாறு!

என்னுடைய தாய் ஒரு நாள் என்னிடம் பேசினாள். .அப்பொழுது எனக்குப் பத்து வயதாகி விட்டது.

"ஏன் மேனே, நீ உன்ரை மச்சாளிடம் பேசிறாயில்லை யாம்?" "ஆர் சொன்னது?"

"உன்ரை கொண்ணன் தான் சொல்லுறான்."

"எந்த மச்சாள்?"

"அதென்ன கேள்வி? ஏன் கொண்ணன்ரை பெண் சாதிதான். அல்லது வேறேயும் உமக்கொரு மச்சாள் இருக்கோ? உம்முடை மூஞ்சை எனக்குப் பிடிக்கேல்லை!"

"ஓ! அதுவோ! அவவோடை நான் என்னத்தைப் பேசிறது? அவ தன்பாட்டுக்கு மூத்தக்காவோடை இங்கிலீசையும் பேசிக்கொண்டு திரியிறா. இல்லை, கேக்கிறன் நீங்கள் எண்டாலும் யோசிச்சியளோ அம்மா, எனக்குக் கொஞ்ச இங்கிலீசு படிப்பிச்சு வைக்க வேணும் எண்டு. அது எல்லாம் உங்களுக்குக் கவலை இல்லை. நான் எப்படித் தெருவழிய திரிஞ்சாலும் உங்களுக்கு என்ன? அக்காமாருக்கு என்ன? என்ரை அண்ணன்ரை பெண்சாதியோடை பேசேல்லை எண்டதுதான் உங்களுக்குக் குறையாய்ப் போச்சு!"

"ஏன் அவ என்ன உம்மடை பவிசுக்குக் குறைஞ்சு போச்சோ, அல்லது கொப்பற்றை பவீசுக்குக் குறைஞ்சு போச்சோ! அதுதான் நீங்கள் இரண்டு பேரும் அவவோடை பேசிறயில்லை!"

அம்மா, எனக்கு அப்பிடி இங்கிலீசு பேசத் தெரியாது. சும்மா ஏன் தேவையில்லாத விஷயங்களைப் பற்றி என்னட்டை கதைக்கிறியள்? என்னை என் பாட்டிற்கு விட்டிட்டால் படிச்சுச் கிடிச்சு ஒரு மாதிரி ஆளாய் வந்திடுவன். அதுவும் விருப்பமில்லை யெண்டால் இப்ப சொல்லி விடுங்கோ நான் போறன்."

“எங்கேயோ போகப் போறாராம்!”

“ஏன் போகப்படாது?”
அதற்குள் என் தாய்க்குக் கோபம் வந்துவிட்டது. அவள் அலறினாள். குளறினாள். என் தந்தையைக்கூட ஏசினாள், இப்படி என்னை ஒரு தாய் சொல்லை மதிக்காத மகனாக வளர்த்து விட்டார் என்று! என்னுடைய தாய் மீண்டும் பேசினாள்.

“டேய் ! பார்த்தியா, உன்ரை மச்சாள் கொண்டு வந்த சீதனத்தை! அவளின்ரை நகைப் பெட்டியை நீ எப்பவெண்டாலும் பாத்தியோ? அதுமட்டும் பெறும் ஒரு லட்சம் ரூபாய்!"

“இதெல்லாம் என்னத்துக்கு எனக்கு சொல்லுறியள். அம்மா?”

“நீயும் அப்பிடி ஒரு பொம்பிளையை முடிக்க வேணு மெண்டது தான் உன்ரை காலத்திலை."

“அம்மா நான் சொல்லுறன் எண்டு கோபிக்க வேண்டாம். உங்களுக்குக் காசு தானே தேவை? ஆனால் என்ரை மச்சாளின்ரை முகத்திலை இருக்கிற வயிரங்களை - வைடூரியங்களை - மாணிக்கங்களை எந்த நகைப் பெட்டியிலை காணலாம்? அல்லது அவவின்ரை கையிலை இருக்கிற கறுத்த வளைய லுக்குப் போதுமோ இந்த நகையெல்லாம்….?”

"என்னடா உளறுகிறாய்?"

“அம்மா, நான் உளறவில்லை. நீங்கள் எங்கடை அண்ணன் கர்ணகை மச்சாளை முடிக்கிறது எண்ட சம்மதத்தோடை இருந்து போட்டு, கடைசியாய்ப் போய்க் காசுக்கும் காணிக்கும் நகைக்கும் ஆசைப்பட்டு வடிவும் அன்பும் இல்லாத ஒரு பொம்பிளையை வீட்டிலை கொண்டு வந்து சேர்த்தியளே!"

எனக்கு மறுபடி அழுகை! விம்மி விம்பி அழுதேன். என் கர்ணகை மச்சாளின் இயற்கை லக்ஷ்மீகரமும் அழகும் என் அண்ணனுக்கும் இந்த வீட்டிற்கும் கிட்டாமல் செய்து விட்டாளே என் தாய் என்று. அதன் பிறகு என் தாய் இரக்கமற்ற ஒரு தாடகையாகி விட்டாள்.

“ஓகோ அப்படியா விஷயம்? நீரும் உம்மடை அப்பரோடை சேர்த்தியோ? அப்படி எண்டால் அந்த கர்ணகிப் பத்தினியை ஒண்டில் நீர், அல்லது உம்மடை அப்பர் போய்க் கலியாணம் முடுச்சுக் கொண்டு வந்து இந்த வீட்டிலே வைச்சுக் கும்பிடுங்கோ! அவள் என்ரை அண்ணற்றை மேள்! ஆனால் விஷயம் இவ்வளவு தூரம் வரும் எண்டு நான் கனவிலையும் எண்ணயில்லை !”

அரக்கி! எனக்குக் கண்ணீர் மாலைகள் ......

"என்ன அழுகிறீர்? ஹூ! உம்முடைய மூக்கிலை சளிவடியுது! அதைப் போய் துடையடா! அதின் பிறகு முகத்தைக் கழுவிப்போட்டு இன்னும் பாக்காத சினிமாப்படம் இருந்தால் அதையும் போய்ப் பார்!" அப்பொழுது வெளியே ஒரு மோட்டார் வண்டி வந்து நின்றது. அது அண்ணனுடையது. அம்மா தன் மார்புச் சேலையைச் சரி செய்து கொண்டு அவசரமாகத் தன் தலைமயிரையும் சரி செய்து கொண்டாள் ........

,அதன் பிறகு என் அண்ணன் உள்ளே வந்து,"என்ன கூட்டாளி அழுகிறியோ?" என்றார்.
"ஒண்டுமில்லை."

“என்ன மாபிள் வாங்கக் காசு வேணுமோ?"

"வேண்டாம்.”

“இனி. நீ கிறிக்கற் விளையாடிப் பழகவேணும், காருக்குள்ளை இருக்குது 'பாட்', 'விக்கட்', 'பந்து' எல்லாம்"

அதற்குள் என் அண்ணனின் மனைவியே வந்து விட்டாள். அம்மா அவளை வினயமாகப் பற்களைக் காட்டி வரவேற்றாள். அம்மாவுக்கு ஆங்கிலம் தெரியாது. ஆனால் பற்களை மட்டும் காட்டத் தெரியும்…..

அண்ணன் என் தலையைத் தடவினார் அன்பாக! அண்ணனின் மனைவி தமிழ் பேசுவதில்லை. தமிழ் தெரிந்திருந்தால் தானே, அந்த இழுமென் மொழியைப் பேசுவதற்கு! அண்ணனுடன் ஏதோ ஆங்கிலத்திற் பேசினாள். எனக்கும் அந்த மொழி கொஞ்சம் தெரிந்துதான் இருந்தது.

"யார் மூக்குச் சிந்தி அசிங்கமாக நிற்கும் இந்தப் பையன்?"

அண்ணன் மௌனம்!

யார்? உங்கள் வீட்டு வேலைக்காரப் பையனா? ஏய் போய்!”

அதற்குள் என் மூத்த அக்கா குறுக்கிட்டு விட்டாள் ஆங்கிலத்தில்!

“அது எங்கள் தம்பி ஆக இளையவன் மச்சாள், வாருங்கோ உள்ளே.

"அம்மா தன் பற்களைக் காட்டிக் கொண்டு பின்தொடர எல்லோரும் உள்ளே போய்விட்டார்கள்.

அண்ணனுடைய கார்ச் சாரதி ஏதோ ஒரு பார்சலைக் கொண்டுவந்து என் கையில் வைத்தான்! இது ஐயாவின் தம்பிக்கு! உடனே அவரிடம் கொடுக்க வேண்டும்!

நான் உடனே அதை மூலைக்குள் எறிந்துவிட்டேன். என் மனம் வேதனைப்பட்டது. உடனே என் கர்ணகை மச்சாளிடம் ஓடவேண்டும் போல் எனக்குத் தோன்றியது; ஓடினேன். அவள் ஏதோ கண்ணீருக்கள் மூழ்கித் தலைவிரி கோலமாகக் கிடந்து புலம்பிக்கொண்டிருப்பாள் என்ற மனப் பதற்றத்துடன் ஓடினேன். என் கற்பனையினால் என் கண்களில் மல்கிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு…..

ஆனால்….ஆனால்......! அரசகுமாரிகள் அழுவதில்லை. அது அவர்கள் அழகிற்கும். மேன்மைக்கும் மன வைராக்கி யத்திற்கும் ஒரு இழுக்குப் போலும்!

அவளுடைய கண்ணுக்கு மை. கன்னத்திற்கு றூஜ். உதடுகளுக்கு லிப்ஸ்டிக் எல்லாம் தேவை இல்லை ஏதோ இறுமாப்பில இவை எல்லாம் அணிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்து விட்டாளோ என்று முதலில் யோசித்தேன். அருகில் சென்று பார்த்தேன் அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை. நான் அவள் முன்னால் பதறி நின்றேன்.

அவள் சிரித்தாள். அத்துடன் அமையாது என் உள்ளம் எல்லாம் கூனிக்குறுகி நாணும்படி என் சேட்டைப் பிடித்து இழுத்து விட்டாள்.

“என்னடா மச்சான், அழுகிறாய்?"
“ஒண்டும் இல்லை!”
“இஞ்சை வா! கொஞ்சம், ‘சொக்கிலேட்டு’த் தின்; வாடா!”

என்னை அணைத்துக் கொண்டு உள்ளே சென்று என் கைகள் நிறைய இனிய பண்டங்கள் தந்தாள்.

இப்பவே எல்லாம் திண்டு முடிக்க வேணும் என்று பணித்தாள். தின்றேன்....... இவ்வளவு அன்பும் அழகும் உள்ளவளை என் அண்ணனும் எங்கள் வீடும் இழந்து விட நேரிட்டு விட்டதே என்று எண்ணினேன்.

சுவைத்து விழுங்கிய 'சொக்கலேட்டு' தொண்டையில் சிக்கிக்கொண்டது. அவள் என் தலையில் தட்டினாள், நெஞ்சையும் முதுகையும் தடவினாள்.......அவள் அன்பு......மீண்டும் என் கண்களில் முத்துமாலை........

"என்னடா மச்சான், இப்ப மாபிள் அடிக்கிறதை விட்டு கிறிக்கட் அடிக்கத் துவங்கி விட்டியாம்?"

அதற்குள் என் கண்ணீரைச் சமாளித்து விட்டேன்.

"உமக்கு ஆர் இதெல்லாம் சொன்னது?"

தனிக் கருவளைக்கவின் தந்த தன் வெள்ளை மணிக்கட்டை இடையில் மடக்கி வைத்துக்கொண்டு அவள் என்னைப் பார்த்தாள்.

"ஒருத்தரும் இல்லை!"

ஆனால் பெண்கள் எதையும் கணத்தில் கேட்டறிந்து கொண்டு விடுவார்கள் என்ற உலக அனுபவம் அந்தச் சிறு வயதில் எனக்கில்லை...... என் அம்மாவுக்கு என்ன எண்ணம் வந்ததோ ஒருநாள் மாலை நான் புத்தகங்களோடு போராடிக் கொண்டிருக்கும் பொழுது என்னிடம் தனியே வந்து பேசினாள்.

"என்ன பெரிய படிப்புக் கவலைபோல இருக்குப் பிரபுவுக்கு?"

"என்ன அம்மா?"

"மச்சாளுக்குக் கலியாணமாம்."

"எந்த மச்சாள்?"

"ஏன் உன்ரை மச்சாளுக்குத்தான்!"

"எனக்கு எத்தனை மச்சாள்மார் இருக்கினம்; முதலில் அண்ணன் பெண்சாதி...."

"வாயைப் பார். வாயை! என்னட்டை அடி வாங்கப் போறாய், கண்டியோ?"

"எனக்கு ஒண்டுக்கும் பயமில்லை அம்மா! நான் தான் எப்பவோ வீட்டை விட்டுப் போறன் எண்டு சொல்லிப் போட்டேனே. அற நனைஞ்சவனுக்குக் கூதல் என்ன குளிர் என்ன?"

என் கண்களில் கண்ணீர் உப்பாகிக் கரிந்து நின்றது. நான் வேகமாக என் புத்தகங்களின் பக்கங்களைப் புரட்டினேன்.

அம்மா, என்னுடைய மேசைமேல் சாய்ந்து நின்று என் தோள் மேல் தன் கையை வைத்தாள். விளக்கின் ஒளியில் அவளுடைய தலையிலுள்ள இடை நரை மயிர்கள் மின்னின. அவள் ஏதோ கலக்கமடைந்தவள் போல மெதுவாகக் கண்ணீர் கலந்த குரலுடன் பேசினாள்.

"நீ கோவிக்கிறது சரியடா மேனே! உன்ரை கர்ணகை மச்சாள் இந்த வீட்டுக்கு வந்திருக்க வேணும்; அந்தநேரம் என்ரை புத்தி மத்திமமாய்ப் போச்சு! அவள் வந்திருந்தால் இந்த வீட்டுக்கு ஒரு மகாலட்சுமி..."

நான் பொங்கித் துளித்த கண்ணீரை அடக்க முயன்றபடி புத்தகத்தின் பக்கங்களை ஒரு பைத்தியகாரன் போலப் புரட்டிக்கொண்டிருந்தேன். சிறிது அன்பு எத்தனை கண்ணீரை வருவித்து விடும் என்று வியந்தேன்....

"இப்பொழுது அவளுக்கு வேறை ஒரு கலியாணம் பேசி இன்னும் இரண்டு கிழமையில் கலியாணமாம்!"

எனக்குச் சிரிக்க வேண்டும் போலத் தோன்றியது. ஆனால், அழுகைதான் வந்தது. புத்தகங்களைத் தள்ளி விட்டு வெளியே ஓடினேன்.

மங்கிய வானத்திலே மதி, மங்கித் தவழ்ந்தது. தென்னை மரங்களின் தலைகளிலே காற்றின் ஓலம்!

தொலைவிலே இரட்டைக் கூகைகளின் குரல்... மேள வாத்யம் "ஜாம் ஜாம்" என்று ஒலிக்க எங்களுடைய மாமா கூட எழுந்து நடமாடித் திரிகிறார். தன் பொங்கும் வயிற்றுக்கு மேல் ஒரு பட்டுச் சால்வையைக் கட்டிக் கொண்டு! என்னுடைய அண்ணனும் அவருடைய மனைவியும் அவருடைய புது மோட்டார் வண்டியிலே வந்தார்கள்.

என் கர்ணகை மச்சாள் மணவறையிலே வந்து இருந்தாள். அந்த நடுத்தர வயதுள்ள மணவாளனும் அவள் அருகில் உட்கார்ந்து இருந்தான். புண்ணியத்தின் அருகில் பாவம் இருப்பது போல. அத்துடன் என்னுடைய அண்ணன் மனைவி தன் கையில் அணிந்திருந்த ஆயிரம் ரூபாய் மணிக்கூடு மின் வெளிச்சத்தில் பளபளக்கும்படியாக என் மச்சாளின் பின்புறமாக நின்றிருந்தாள். உதய சூரியனின் புறத்தே கார்முகில் நிற்பது போல. அம்மாவும் நின்றிருந்தாள் தன் நரிப்பார்வையோடு.... எனக்கு எங்காவது சென்று அழவேண்டும் போல இருந்தது.......

மறுநாள் மணப்பெண்ணாகிய என் மச்சாள் ஒரு அறையில் தனியே இருந்தாள். இணைக் கூறையும் அணிந்துகொண்டு.......! வள் அழுதுகொண்டிருப்பாள் என்று அஞ்சி நான் வெளியே நின்றேன். ஆனால் அப்படி ஒன்றும் இல்லை. என்னைக் கண்டவுடன், "ஏய் மச்சான்" என்று ஏதோ காணாததைக் கண்டு விட்டது போலக் குரல் கொடுத்தாள். நான் தயங்கித் தயங்கி உள்ளே சென்றேன்.

அவள் என் வயிறு நிறையும் மட்டும் இனிய பண்டங்கள் உண்ணத் தந்தாள். என்னோடு எத்தனையோ காலம் பழகிய மச்சாளாக இருந்தும் அந்த நேரத்தில் அவளுடன் தனியே இருக்க என் மனம் சிறிது துணுக்குற்றது. ஓடிவிடலாம் என்று எழுந்தேன். அவள் விடவில்லை. என்னுடைய கையைப் பிடித்து இழுத்து அப்படியே தன் முன்னால் அமர்த்திக் கொண்டாள்.

"ஒரு இடமும் போகயில்லை மச்சாள்! சும்மா வெளியாலை போய் விளையாடப் போறன்!"

"இரடா மச்சான்! நல்லாய் வயிறு முட்டத் தின்னன்ரா!"

அவளைக் கேலி செய்ய வேண்டும் என்று எண்ணினேன்.

"என்ன மச்சாள், ராத்திரி மணவறையிலை கூறைச்சீலையும் உடுத்து நகை எல்லாம் போட்டுத் தலையைக் குனிஞ்சு கொண்டு இருந்தீரே! அப்ப இந்த வாய் எல்லாம் எங்கைபோச்சுது?"

"போடா குரங்கே, சனியன், மூதேசி!"

அவள் கண்கள் பளபளக்கும் வைரத்தில் பதித்து விட்ட மரகதங்கள் போல் மின்னின...... கண்ணீர்...?

ஆனால் அரசிகள் அழுவதில்லையே!.....

# காலத்தை வென்று வாழும் கலை, இலக்கியவாதி அன்புமணி இரா.நாகலிங்கம்

**சட்டத்தரணி, 'பாடும்மீன்' சு.ஸ்ரீகந்தராசா - அவுஸ்திரேலியா.**

அன்பிற்குரிய இரா.நாகலிங்கம் அண்ணன் அவர்கள் 2014 ஜனவரி மாதம் 12 ஆம் திகதி, மறைந்துவிட்டார் என்ற செய்தியினை அறிந்த போது தாங்க முடியாத துயரில் தவித்தேன். தான் புனைந்து கொண்ட 'அன்புமணி' என்ற பெயருக்கேற்றவாறே எல்லோரிடத்தும் அன்புள்ளவராக வாழ்ந்த பெருமைக்குரியவர் அவர். தமிழ் இலக்கியத்தைத் தன் உயிரினும் மேலாக நேசித்த பெருமகன். தான் எழுதுவதுடன் மட்டுமன்றி, மற்றையோரை எழுத ஊக்குவிப்பதிலும், மற்றையோரின் படைப்புக்களை வெளிக்கொணர்வதிலும் அவர் ஆற்றிய பணிகள் அளவற்றவை, தன்னிகரற்றவை.



அன்புமணி அண்ணன் அவர்கள், மிகச்சிறந்த நிர்வாகி, நேர்மையான அரச அதிகாரி, என்றுமே சோர்வடையாத இலக்கிய ஊழியன், தனித்துவம் மிக்க படைப்பாளி என்னும் எல்லாவகையான சிறப்புக்களுக்கும் மேலாக, மனிதாபிமானம் மேலோங்கி நின்றதோர் உயரிய 'மனிதனாக'வும் வாழ்ந்த செம்மல்!

இலங்கையின் தமிழ் கலை, இலக்கிய வரலாற்றில் தடித்த எழுத்துக்களால் நிரப்பப்படும் பல பக்கங்கள் அவருக்குரியதாக இருக்கும். கதை, கட்டுரை, நாடகம், நாவல், விமர்சனம், நேர்காணல் என்று இலக்கியத்தின் பல துறைகளிலும் தனது முத்திரையைப் பதித்துப் புகழ்பெற்ற எழுத்தாளரகத் திகழ்ந்த அன்புமணி அவர்கள், இளமையிலிருந்தே இதழாசிரியராக இணையற்ற ஈடுபாட்டுடன் வலம் வந்தவர். இப்போதய இதழாளர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக வாழ்ந்தவர், பல சிற்றிதழ்களுக்கு ஆலோசகராகத் திகழ்ந்தவர். இவற்றுடன் மட்டுமன்றி, நாடக நடிகராக, இயக்குனராக, நல்லதொரு கலைஞராகத் தமிழ்க் கலை உலகிலும் பிரகாசித்தவர்.

அன்புமணி அவர்களை எனது அரும்பு மீசைக்காலத்திலிருந்து நான் அறிவேன். என்னையும் அவர் அறிவார். அந்த நாட்களில் மட்டக்களப்பு கலாச்சாரப் பேரவை பிரதேச ரீதியிலும், மாவட்ட ரீதியிலும் வருடா வருடம் நடாத்திவந்த நாடகப் போட்டிகளுக்கு நடுவர்களில் ஒருவராக அன்புமணி அவர்கள் கடமையாற்ற வருவார். களுவாஞ்சிக்குடி இளம் நாடக மன்றம் நாடகம், நாட்டுப்பாடல் போட்டிகளில் பலதடவைகள் முதற் பரிசுகளைப் பெற்று வந்தது. மன்றத்தின் நாடகங்களை எழுதி, இயக்கி, நடித்தவன் என்றவகையில் அன்புமணி அவர்களின் அறிமுகம் கிடைத்தது. அவரது கலை உள்ளத்தில் எனக்கும் ஓர் இடம் கிடைத்தது. அந்த நட்புறவு இறுதிவரை தொடர்ந்திருந்தது.

1952இல் கல்வித்திணைக்கத்தில் எழுது வினைஞராக அரச சேவையில் சேர்ந்த அவர், 1970களில் மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தில் நிதி உதவியாளராகப் பணியாற்றினார். 1981ஆம் ஆண்டு, இலங்கை நிர்வாக சேவையின் உள்ளார்ந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த, இரா. நாகலிங்கம் அவர்கள் களுவாஞ்சிக்குடி உதவி அரசாங்க அதிபர், மட்டக்களப்பு கச்சேரி தலைமையக உதவி அரசாங்க அதிபர், வடக்கு, கிழக்கு மாகாண சபையின் உள்துறை உதவிச் செயலாளர், ஆளுனர் அலுவலகத்தின் சிரேட்ட உதவிச் செயலாளர் ஆகிய பதவிகளில் அமர்ந்து மக்கள் பணியாற்றியவர். அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றபின்னர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வி. தங்கேசுவரி கதிராமன் அவர்களின் செயலாளராகக் கடமை ஆற்றினார்.

அன்புமணி அவர்கள், ம.தெ.எ.பற்று உதவி அரசாங்க அதிபராக, களுவாஞ்சிக்குடி அலுவலகத்தில் பணியாற்றிய காலத்தில் அந்தப் பகுதி மக்களுக்குச் செய்த சேவைகள் அளப்பரியவை. பெரும்பாலும் அதிகார தோரணையுள்ள அதிகாரிகளையே கண்டு பழக்கப்பட்டு விட்ட மக்களுக்கு, குறிப்பாக ஏழை எளிய மக்களுக்கு, அன்பாகப் பேசி, மனிதாபிமனத்துடன் பிரச்சினைகளை அணுகி உதவிசெய்யும் ஓர் அதிகாரியின் செயற்பாடு நம்பிக்கையைக் கொடுத்தது. அதனால் அன்புமணி அண்ணனை அந்தப்பிரதேச மக்களுக்கு மிகவும் பிடித்திருந்தது. காரணமின்றித் தேங்கிக்கிடந்த கோப்புக்கள் பல அசுர வேகத்தில் நகரத் தொடங்கின. இந்திய அமைதிப்படையினர் நிலை கொண்டிருந்த காலகட்டத்தில், எத்தனையோ வகையான இடர்ப்பாடுகளுக்கும், அசௌகரியங்களுக்கும் மத்தியிலும் அவர் தனது அரசபணியினை மிகவும் ஆளுமையுடன் ஆற்றி, மக்கள் மனதில் மாமலையாக உயர்ந்து நின்றார்.

என்னை ஒரு நூலாசிரியராக ஆக்கிய பெருமை அண்ணன் அன்புமணி அவர்களுக்கே உரியது. கொழும்பில் நான் கடமையாற்றிக் கொண்டிருந்த போது, களுவாஞ்சிக்குடியில் உதவி அரசாங்க அதிபராக இருந்த அவர் ஒருநாள் என்னைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு, எனது நாடகங்களை நூலாக்க விரும்புவதாகவும், அவற்றைத் தன்னிடம் தரும்படியும் கேட்டார். அதன்பின்னர் அவரே என் வீடுக்குச் சென்று, என் மனைவியிடம் எனது நாடகப் பிரதிகளைப் பெற்று, நடிப்பதற்காக எழுதப்பட்டிருந்த அந்த நாடகங்களில் நூலாக்கத்தகுந்தவை எனக்கருதிய ஆறு நாடகங்களை, ம.தெ.எ.பற்று கலசாரப் பேரவையின் சார்பில் 'சந்ததிச் சுவடுகள்' என்ற பெயரில் நூலாக்கம் செய்து, 1988 ஆம் ஆண்டு வெளியீட்டு விழாவும் நடாத்தினார். நான் பிறப்பதற்கு முன்னரே, 1952ஆம் ஆண்டில் 'மனோகரா' என்னும் மேடை நாடகத்தின் முலம் ஒரு நடிகராகவும், நாடகத் தயாரிப்பாளராகவும் அறிமுகமாகிப் புகழ் பெற்றிருந்த அண்ணன் அன்புமணி அவர்கள், எனது நாடகங்களை நூலுருவாக்கியமை எனது பாக்கியம் என்றே கருதுகிறேன். இதனைப்போல எத்தனையோ நூல்கள் வெளிவரக் காரண வானாக இருந்து பலரை எழுத்துலகுக்கு அவர் இழுத்துக் கொண்டு வந்து அறிமுகமாக்க இருக்கிறார்.

1991ஆம் ஆண்டு நான் அவுஸ்திரேலியாவுக்குப் புலம் பெயர்ந்து வந்தபின்னர், கடிதங்களும், தொலைபேசியும் தொடர்ந்து எங்கள் உறவைப் பேணிவந்தன. ஒவ்வொரு தடவையும் ஊருக்கு நான் வந்தபோது எங்கிருந்தாலும் அவரைச் சென்று பார்த்தேன், கதைத்தேன், பல விடயங்களை பரிமாறி மகிழ்ந்தோம். கடந்த 2010 ஆம் ஆண்டு, மட்டக்களப்பு நூல் நிலைய மண்டபத்தில், எனது நூல் வெளியீட்டை அவராகவே ஒழுங்கு செய்து, மிகவும் சிறப்பாக நடாத்தி என்னைப் பெருமைப்படுத்தினார்.



அவர் இறப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்னர், 2013இல் அவசரமானதொரு பயணத்தில் வந்து சில நாட்களே தங்கி நின்ற போதும், நண்பர் ஓ.கே.குணநாதனுடன் ஆரையம்பதிக்குச் சென்று அவரைச் சந்தித்தேன். அவர் இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர்கூட, அவரது விபத்துப் பற்றித் தெரியாத நிலையில், ஓர் இலக்கிய விழா விடயமாக அவரைத் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயன்றேன். அப்போது அவர் பேச முடியாத நிலையில் இருந்ததை அவரது சகோதரி மூலம் அறிந்து, சில நாட்களின் பின்னர் மீண்டும் தொடர்பு கொள்வதாகக் கூறினேன். ஆனால், இனி எப்போதுமே அவரக் காண முடியாமலும், கதைக்க முடியாமலும் போய்விடும் என்று அப்போது நான் நினைத்ததில்லை.



இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி என்னும் அழகிய கிராமத்தில், 1935ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆறாம் திகதி, வைரமுத்து இராசையா ~ பொன்னர் தங்கப் பிள்ளை தம்பதிகளின் மகனாகப் பிறந்த நாகலிங்கம் அவர்கள் தனது பதின்ம வயதுகளிலேயே கலை, இலக்கிய முயற்சிகளில் கால் பதித்தவர். ஆரம்பத்தில் மேடை நாடகங்களில் பிரபல்யமாகிக் கொண்டிருந்த அவரின் முதலாவது ஆக்கமே இலக்கிய உலகில் அவரைப் பளிச்சென அறிமுகப்படுத்திப் பெருமை சேர்த்திருக்கிறது.

இலங்கை எழுத்தாளர்களின் ஆக்கங்கள் இந்தியப்பத்திரிகைகளில் பிரசுரமாவதென்பது மிகவும் அரிதாக இருந்த அந்தக்காலத்தில், 1954 ஆம் ஆண்டு, 'கிராமபோன் காதல்' எனும் தலைப்பிலான அவரது முதலாவது படைப்பே இந்தியப் பத்திரிகையான 'கல்கி இதழில் பிரசுரமானது என்றால் அன்புமணி அண்ணனின் இலக்கிய ஆற்றலை என்னென்பது? 500க்கும் மேற்பட்ட சிறுகதைகள், ஏராளமான கட்டுரைகள், விமர்சனங்கள், கவிதைகள், நாடகங்கள் என்பவற்றை எழுதிக் குவித்திருக்கும் கிழக்கிலங்கையின் மாபெரும் இலக்கியவாதியான அன்புமணி அவர்களின் ஆக்கங்கள், இலங்கை இந்தியப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. அவரின் பல நாடகங்கள் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டுள்ளன. 'நமது பாதை' என்ற பெயரிலான அவரது நாடகம், 1967 ஆம் ஆண்டு மூன்று மாதங்கள் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகியிருக்கிறது.

1970ஆம் ஆண்டு முதல் 1972ஆம் ஆண்டு வரை 'மலர்' என்ற பெயரில் அவர் வெளியிட்டுவந்த இலக்கிய சஞ்சிகை இலங்கை இதழியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாக விளங்கியிருக்கிறது. செங்கதிரோன் கோபால கிருஸ்ணன் அவர்களின் 'செங்கதிர்' இதழின் வளர்ச்சியிலும் மிகுந்த அக்கறை செலுத்தி இருக்கின்றார்.

அன்புமணி அவர்கள் தமது படைப்புக்களை, இல்லத்தரசி(சிறுகதை) 1980, ஒரு தந்தையின் கதை(நாவல்) 1989, வரலாற்றுச் சுவடுகள் (சிறுகதை) 1992, ஒரு மகளின் கதை (குறுநாவல்) 1995, தமிழ் இலக்கிய ஆய்வு, எட்டுத் தொகை பத்துப்பாட்டு அறிமுக நூல் 2007, பதினெண் கீழ்கணக்கு அறிமுக நூல் 2007 ஆகிய தலைப்புக்களில் ஏழு நூல்களாக வெளியிட்டுள்ளார். நூலுருப்பெறாத ஆக்கங்கள் இன்னும் பல உள்ளன என்று தெரியவருகிறது.

அவர், தனது அன்பு வெளியீட்டகத்தின் மூலம் பிற எழுத்தாளர்களின் பல நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார்.

மாகோன் வரலாறு – தங்கேஸ்வரி,
குளக்கோட்டன் தரிசனம் – தங்கேஸ்வரி
நூறு வருட மட்டு நகர் அனுபவங்கள் – ஆசிரியர் திலகம் எஸ். பிரான்ஸிஸ்,
மட்டக்களப்பில் ஒரு மாமனிதர் ஜோசெப்வாஸ் – ஆசிரியர் திலகம் எஸ். பிரான்ஸிஸ்,
வாழ்க்கைச் சுவடுகள் (சுயசரிதம்) – ஆசிரியர் திலகம் எஸ்.பிரான்ஸிஸ், நீறுபூத்த நெருப்பு (நாடகங்கள்) ~ ஆரையூர் இளவல், செல்லத்தம்பி
என்பவை அவற்றில் சிலவாகும்.

இந்து சமய விவகார அமைச்சின், தமிழ்மணி விருது (1992), வட~கிழக்கு மாகாண ஆளுனர் விருது (2001), இலங்கை அரசின், கலாபூஷணம் விருது (2002), மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் பேரவையின் 'இலக்கியச்சுடர் விருது '(2003) ,காத்தான்குடி சமாதானப் பேரவையின் 'சமாதானக் காவலர்' விருது, சிந்தனை வட்டம் வழங்கிய 'பல்கலை வித்தகர்' பட்டம் (2008) இவ்வாறு தேசீய அளவிலும், பிரதேச மட்டத்திலும் பல்வேறுவிருதுகள் அவரை அடைந்து சிறப்புப் பெற்றன.

அன்புமணி இரா. நாகலிங்கம் அவர்களது மறைவினால், தமிழையும், தமிழ் மண்ணையும், தமிழ் மக்களையும் நேசித்த, உள்ளத்தால் உயர்ந்ததொரு மனிதனை, தமிழ்க் கலையையும், தமிழ் இலக்கியத்தையும் தனது இரு கண்களாகப் பேணிய ஒப்பற்ற இலக்கிய வாதியை, உலகத்தமிழ் இலக்கிய உலகம் ~ குறிப்பாக இலங்கைத் தமிழ்க்கலை, இலக்கிய உலகமும் சிறப்பாக மட்டக்களப்புத் தமிழகமும் ~ இழந்து நிற்கின்றன. அவரின் இடத்தினை ஈடுசெய்ய முடியாமல் தவிக்கின்றன என்பதுதான் இன்றைய நிலைமை.

அன்புமணி அண்ணனின் பெயரும், புகழும் காலங்களைக் கடந்து வாழும்•

**தமிழகத்தின் மூத்த எழுத்தாளரும், சாகித்திய அகாடமி விருதுபெற்றவருமான திரு.ஜோ டி குருஸ் அவர்களது வாழ்த்துச் செய்தி!**



**அன்புத் தம்பி எஸ்.ஏ.ஸ்ரீதர் வணக்கம். பணிசார்ந்து ஏற்படும் பிரயாண அவசரங்களால் சிலருக்கு குறித்த வேளைகளில் பதிலிட முடியவில்லை. அதுபோல் இக்கட்டுத்தான் இதுவும். தாமதத்திற்கு மன்னிக்கவும். தங்கள் பணிசிறக்க வாழ்த்துக்கள். நன்றி.**
**ஜோ டி குருஸ்**

**மட்டக்களப்பு தமிழகத்தின் தமிழ் இலக்கியச் சொத்தாக விளங்கியவர்! மட்டக்களப்புத் தமிழ் படைப்பாளிகளையும் ஏனைய உள்நாட்டு வெளிநாட்டு படைப்பாளிகளுக்கும் இலக்கியப் பாலமாகச் செயற்பட்டவர்!**



2004ம் ஆண்டில் எழுத்தாளர்.ஆ.மு.சி. வேலழகன் அவர்களால் அறிமுகப் படுத்தப்பட்ட நாள் முதல்! எனக்கு மிகவும் நெருக்கமாக இருந்தவர் அன்புமணி ஐயா அவர்கள்! என்னுடைய சிறுசிறு முயற்சிகளைக் கூட மனம் விட்டுப் பாராட்டினார். 'கலைக்கேசரி'யில் இடம்பெற்ற அவருடைய நேர்காணலில் கூட நம்பிக்கை தரும் இளைய தலைமுறை இலக்கிய செயற்பாட்டாளர்கள் வரிசையில் வாழைச்சேனை எஸ்.ஏ.ஸ்ரீதர்.. என என்னையும் சேர்த்து பெருமைப்படுத்தியவர். இறுதியாக என்னுடைய இலக்கியச் சிந்தனை சிற்றேட்டுக்காக அவரை நேர்காணல் செய்திருந்தேன்! என்னுடைய மனைவியின் சகோதரி கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி தமிழ் சிறப்புக் கற்கைநெறியின் பொருட்டு 'அன்புமணி' அவர்களின் கலை, இலக்கியப் பணிகள் குறித்து 2011இல் ஆய்வு செய்திருந்தார். அதனை இவ்வருடம் அமரர். அன்புமணி அவர்களின் 87ஆவது பிறந்த தினத்தினை முன்னிட்டு எதிர்வரும் மார்ச்–6ஆம் திகதியினை முன்னிட்டு வெளியிடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். 'நூலக உலகத்தின்' மார்ச் மாத முதல் இதழில் அன்புமணி அவர்களை நான் கண்ட நேர்காணலும் இடம்பெறும்.

# உலக பிரெய்லி தினம் 2022 தீம், வரலாறு, முக்கியத்துவம், செயல்பாடுகள் மற்றும் பார்வையற்றவர்கள் பயன்படுத்தும் எழுத்து முறை பற்றிய சில சுவாரஸ்யமான தகவல்கள்


உலக பிரெய்லி தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 4 ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது. இந்த நாள் லூயிஸ் பிரெய்லியின் பிறந்த நாளாகக் கொண்டாடப் படுகிறது. இந்நாளில், மாற்றுத் திறனாளிகளின் உரிமைச் சட்டம், கண் நோய்களைக் கண்டறிதல், தடுப்பு, மறுவாழ்வு என்ற தலைப்பில் பேசப்படுகிறது.

## உலக பிரெய்லி தினம் 2022 தீம்

தீம் இன்னும் அறிவிக்கப்படவில்லை. கடந்த ஆண்டு (2021) உலக பிரெய்லி தினத்தின் கருப்பொருள் ”சாதாரண சூழ்நிலையில் கூட, குறைபாடுகள் உள்ளவர்கள் - உலகளவில் ஒரு பில்லியன் மக்கள்- வாய்ப்பு குறைவு சுகாதாரப் பாதுகாப்பு, கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் சமூகத்தில் பங்கேற்பதற்கு”.

## வரலாறு

பிரெய்லி எழுத்தை கண்டுபிடித்த லூயிஸ் பிரெய்லியின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் உலக பிரெய்லி தினம் அனுசரிக்கப்படுகிறது. அவர் ஜனவரி 4, 1809 இல் பிறந்தார். லூயிஸ் தனது 15 வயதில் தான் பிரெய்லி எழுத்துக்களைக் கண்டுபிடித்தார் என்று சொல்லலாம். இது பார்வையற்றோருக்காக உருவாக்க பட்டது. பிரெய்லி முறைக்கு அவர் பெயரிடப் பட்டது.




பிரெய்லி என்பது தொட்டுணரக்கூடிய எழுத்து முறை. இது ஒரு சிறப்பு வகை உயர்த்தப்பட்ட காகிதத்தில் எழுதப்பட்டுள்ளது. முன்பு இதன் குறியீடு 12 புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டது. 12 புள்ளிகள் 66 வரிசைகளில் வைக்கப்பட்டன. இருப்பினும், அந்த நேரத்தில் நிறுத்தற்குறிகள், எண்கள் மற்றும் கணிதக் குறியீடுகள் அதில் இல்லை. லூயிஸ் பிரெயில் 64 எழுத்துக்கள் மற்றும் குறியீடுகளைக் கண்டுபிடித்ததன் மூலம் இதை மேலும் மேம்படுத்தினார், 06க்கு பதிலாக 12 புள்ளிகளைப் பயன்படுத்தினார், இது நிறுத்தற்குறிகள், எண்கள், உருப்பெருக்கம் மற்றும் இசைக் குறியீடுகளை எழுதுவதற்குத் தேவையான குறியீடுகளையும் வழங்கியது. பிரெய்லி 1829 இல் பிரெய்லி ஸ்கிரிப்ட் முறையை முதன்முதலில் வெளியிட்டார்.




லூயிஸ் பிரெய்லி 1832ஆம் ஆண்டு ஜனவரி 6 ஆம் தேதி தனது 43வது வயதில் இறந்தார். பிரெய்லி இறந்து 1868 ஆண்டுகளுக்குப் பிறகு 16 ஆம் ஆண்டில் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டார். இந்த மொழி இன்றும் உலகம் முழுவதும் பயன்படுத்தப் படுகிறது.

## முக்கியத்துவம்

தகவல் தொடர்புகளில் பிரெய்லியின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த உலக பிரெய்லி தினம் கடைபிடிக்கப்படுகிறது. உலகின் முதல் சர்வதேச பிரெய்லி தினம் ஜனவரி 4, 2019 அன்று அனுசரிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் பொதுச் சபை உலக பிரெய்லி தினத்திற்கான தீர்மானத்தை 6 நவம்பர் 2018 அன்று ஏற்றுக் கொண்டது. பார்வை அற்றவர்களின் மனித உரிமைகளை உறுதி செய்வதற் காக ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 4 அன்று உலக பிரெய்லி தினம் அனுசரிக்கப்படுகிறது. குறைந்த பார்வை கொண்ட மக்கள் மற்றும் அவர்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய.

**நடவடிக்கைகள்**

- இந்நாளில் பிரெய்லி மொழி பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.
- பார்வையற்றோர் மற்றும் பார்வையற்றோருக்கு உதவுவதில் லூயிஸ் பிரெய்லியின் பங்களிப்பை அங்கீகரிப்பதே இந்த நாளைக் கொண்டாடுவதன் நோக்கமாகும்.
- இந்நாளில், உலக பிரெய்லி தினத்தை முன்னிட்டு மாணவர்கள் கட்டுரைகள் எழுதுவதுடன், மக்களை பிரெய்லியின்பால் ஈர்க்கும் வகையில் பள்ளிகளில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும்.
- இந்நாளில், பார்வையற்றோருக்கு உதவும் வகையில், இடங்களில் முகாம்கள் அமைத்து, விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

பார்வையற்றோர் வாசிக்க உதவும் 'பிரெய்லி' முறையை கண்டுபிடித்த லூயி பிரெய்லியின் பிறந்த நாள், உலக பிரெய்லி தினமாக கொண்டாடப்படுகிறது. அவர், **1809, ஜன., 4ல்**, பிரான்சில் பிறந்தார். மூன்றாம் வயதில் விளையாடிக் கொண்டிருந்த போது, ஊசி அவரது கண்ணில் பட்டதில் ஒரு கண் பார்வையை இழந்தார். 1819ல், விழி இழந்த இளைஞர் நிறுவனத்தில் சேர்க்கப்பட்டார். விரல்களால் பேப்பரை தடவிப்பார்த்து எண்ணங்களை பரிமாற்றம் செய்யும் முறையைக் கற்று, அதில் சில முன்னேற்றங்களை கொண்டுவந்தார். கடைசியாக புள்ளிகளை எண்ணி எண்ணி எழுத்துகளை புரிந்துகொள்ளும், 'பிரெய்லி' முறையை உருவாக்கினார். இம்முறை, **1820**ல் வெளியிடப்பட்டு, **1932**ல், சர்வதேச மாநாட்டில் அதிகாரப்பூர்வ அங்கீகாரம் வழங்கப்பட்டது. பார்வையற்யோர் எழுத்தை அறிய உதவும் பிரெய்லி முறையில், **2,500** புத்தகங்கள், தமிழ்நாட்டிலுள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் உள்ளன.




மனுக்குலத்தின் நன்மைக்காக காலந்தோறும் உருவாக்கப்படுகின்ற நியதிகளும் - கருவிகளும் அந்த மனுக்குலத்திற்கே ஆபத்தாய் மாறுவதை நூற்றாண்டுகள் தோறும் வரலாறுகள் பதிவு செய்தே வருகின்றன. இவற்றினால் அதிகம் பாதிக்கப்படுவது பெண்களும் குழந்தைகளுமே!... இந்த மனித சமுதாயம் வளர்ச்சி என்கின்ற பெயரில் மனித பண்பாட்டினையும் உயிர்களையும் பலிகொடுத்தே புதியவற்றை உள்வாங்கிக் கொண்டிருக்கின்றது. நாளடைவில் அதுவே பழகிப் போகின்றது. தற்பொழுது நமது சமூகத்தில் பயங்கரமானதொரு விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றதொரு விடயமாக மாறிவருகின்றது நவீன கையடக்கத் தொலைபேசிப் பாவனை. இணையத்தளங்கள் உண்டாக்கிய விபரீதங்கள் சற்றுத் தள்ளியிருந்தாற் போல் தோன்றியது ஆனால், செல்போன்கள் நமது நடு வீட்டிற்குள்ளேயே நுழைந்து விட்டது. அதுவும் படுக்கையறை வரை நுழைந்து மனிதர்களை முழுமையாக ஆட்கொண்டு விட்டது.

1990களில் அறிமுகமான செல்போனை பாவிப்பவர்களது எண்ணிக்கை தற்பொழுது 650 கோடியை தாண்டி விட்டது. 100இற்கு 86 பேர் செல்போன் பாவிக்கின்றனர், அத்தோடு ஒன்றுக்கு இரண்டு செல்போன் பாவிப்பவர்களும் அதிகமாக உள்ளனர். நமது நாட்டில் செல்போன் 1990ஆம் ஆண்டில் அறிமுகமானது, செல்டெல் நிறுவனம் இலங்கையில் இதனை அறிமுகப்படுத்தியது, அப்போது அதன் விலை 75 ஆயிரம் ரூபாய் முதல் 1 இலட்சம் வரை இருந்தது. அதனால் அதனை செல்வந்தர்கள் மாத்திரம் பயன்படுத்தினர். அளவும் பெரியதாக இருந்தது. ஆனால் இன்று கையடக்க அளவில், எல்லோரும் பெறக் கூடிய மலிவு விலைகளில் அனைத்து வசதிகளும் கொண்ட செல்போன்கள் சந்தையில் உள்ளன. இதன் காரணமாக இன்று வீடுகளில் உள்ள பதின்ம வயது தாண்டிய பிள்ளைகளின் கைகளில் செல்போன் இலகுவாக கிடைத்து விட்டது. பிள்ளை படிக்கின்றதோ இல்லையோ, வேறு துறைகளில் ஆற்றல் உள்ளதா இருக்கின்றதோ இல்லையோ ஆனால் பதின்ம வயது ஆண் பிள்ளைகளுக்கு மோட்டார் சைக்கிளும், செல்போனும் இன்று ஏதோவொரு வகையில், கிடைத்து விடுகின்றது.

02 கோடி 08 இலட்சம் வரையான மக்கள் தொகையினைக் கொண்ட இலங்கையில், 2012இன் இறுதிவரை 02 கோடி 03 இலட்சம் செல்போன்கள் பாவிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. இன்று அது இன்னும் அதிகரித்துள்ளது. ஸ்மார்ட் போன்களின் வருகை வருகை செல்வந்தர் குடும்பம் முதல் சாதாரண கூலித் தொழிலாளியின் வீடு வரை நுழைந்து இதனை சாத்தியமாக்கி இருக்கிறது.

ஒரு வீட்டிற்குள் நான்கைந்து போன்கள் பாவிக்கப் படுகின்றமையினையும் நாம் கண்கூடாகக் காணுகின்றோம்.

தொலைக்காட்சி எப்படி மனிதர்களை சோம்பேறி களாக்கி தன் முன்னால் அடங்கச் செய்ததோ! அதை விட மோசமான நிலைக்குச் சென்று மனிதர்களின் குரூர எண்ணங்களைத் தூண்டி, காலங்காலமாக பண்பாடு, வரலாறு, குடும்ப கௌரவம் என்கின்ற சுவர்களினால் கட்டுப் படுத்தப்பட்டு வந்த மனித எண்ணங்களை ஏதோ ஒரு தருணத்தில் புரட்டிப்போட்டு எல்லா மனிதர்களுக்கும் தவறுகள் செய்வதற்கான சந்தர்ப்பங்களை கைக்குள்ளேயே ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது செல்போன்கள்! இதற்கான வழிகளாக விளங்கும் சமூக வலைத்தளங்களும், ஆபாச இணையத்தளங்களும் இன்று கையடக்கத் தொலைபேசி வழியே மிக இலகுவாக பாவிக்கக் கூடியதாக மாறியுள்ளன. எங்கோ தொலைவில் நடக்கின்ற விடயங்களை செய்திகள் ஊடாக அறிந்து கொண்டிருந்த நாம், இன்று அதனை நம் பக்கத்து வீடுகளில் நடக்கின்ற சம்பவங்களாக காணும் அபாயகரமானதொரு நிலைக்கு ஆளாகியுள்ளோம்.

குழந்தைக்கு சாப்பாடு கொடுப்பதிலிருந்து தூங்கச் செல்வது வரை செல்போனின் தேவை நமக்கு ஏற்பட்டுள்ளது. ஒரு காலத்தில் வீட்டில் உள்ள பெரியோர்கள் குழந்தைகளுக்கு கதைகள், பாடல்கள் சொல்லி சாப்பாடு ஊட்டுவதும், தூங்க வைப்பதும் இருந்த ஆரோக்கிய நிலை மாறி பெரியவர்கள் கூட கையடக்கத் தொலைபேசிகளில் கூட மூழ்கியிருக்க அந்தப் பெரியவர்களின் பணியினைக் கூட செல்போன்கள் தான் செய்து கொண்டிருக்கின்றன. நமது சௌகரியத்துக்காக குழந்தைகளின் நச்சரிப்புக்களிலிருந்து தப்புவதற்காக அவர்கள் கைகளில் செல்போன்களைக் கொடுத்து – ஆபத்தானதொரு எதிர்காலத்திற்கு நாமே வழிவகுத்து விட்டோம்!!

வேலைக்குச் செல்கின்ற பெற்றோர் உள்ள வீடுகளில் தாத்தா, பாட்டியுடன் பெரும்பாலான நேரங்களில் தனித்திருக்கின்ற குழந்தைகள் - அவர்கள் தொலைக்காட்சியில் மூழ்கியிருக்கின்ற தருணங்களில் அவர்களின் செல்போன்களை எடுத்துப் பாவிக்கின்றனர். பராயமடைந்த பெண் பிள்ளைகள் சற்று மேலதிகமாகச் சென்று, தாம் இரகசியமாக வாங்கி வைத்திருக்கின்ற சிம் கார்டினை அந்த செல்போன்களில் பொருத்தி, தமது அந்தரங்கமான தொடர்புகளை மேற்கொள்கின்றனர். உதாரணமாக சில பெண்குழந்தைகள் தம்மை விட வயதில் மூத்த ஆண்களிடம் காதல் வயப்பட்டு அவர்களுக்கு எஸ்.எம்.எஸ். வாயிலாகவும், வீடியோ காட்சிகள், புகைப்படங்கள் வாயிலாகவும் காதல் வார்த்தைகள் மட்டுமல்லாது! அதற்கு ஒருபடி

மேல்சென்று ஆபாசமான உரையாடல்களை மேற்கொள்கின்றனர்.

இன்னொரு சாரார் உயர்கல்வி பயில்கின்ற பெண் பிள்ளைகள், பிரத்தியேக வகுப்புக்களுக்காக வெளியிடங்களுக்குச் சென்று வருகின்றவர்கள், வேலைகளுக்காக வெளியிடங்களுக்குச் சென்று வருகின்ற பெண் பிள்ளைகள் தமக்கென பிரத்தியேகமாக செல்போன்கள் வைத்துள்ள பெண் பிள்ளைகளில் பெரும்பாலானோரின் செயற்பாடுகள் மிகவும் அதிர்ச்சியடைய வைக்கின்றன.

பேஸ்புக், வாட்ஸ்அப், டுவிட்டர், இன்ஸ்டகிராம், டிக்டாக்.. என ஏராளமாக சமூக வலைத்தளங் களும், செயலிகளும் கொண்டுள்ள செல்போன் உலகின் பால் தம்மை இழந்து! நாம் தனியே தானே இருக்கின்றோம்! யாருக்குத் தெரியப் போகின்றது! முடிந்தால் மறுதரப்பில் இருக்கின்ற ஆணுக்கும் நமக்கும் மட்டும் தான் தெரியப் போகின்றது என்கின்ற அசட்டு தைரியத்தில் எதிர்முனையில் இருக்கின்ற ஆண் எனும் வக்கிரம் நிறைந்த கயவனிடம் தமது அந்தரங்க புகைப்படங்களை பகிர்வதும், வீடியோ அழைப்பில் தமது உடல் அந்தரங்கங்களை வெளிப்படுத்துவதும் பின்னர் அவை சமூக வலைத்தளங்களில் வெளியாகி பெண் பிள்ளைகள் தற்கொலைக்கு முயல்வதும்! இன்று மிகவும் சாதாரண செய்திக்குரிய ஒரு சம்பவமாக நாள்தோறும் உலகமெங்கிலும் நடைபெற்று வருகின்றது!...

இது போதாதென்று, 2020இல் தொடங்கி இன்றுவரை முழு உலகையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்ற கொடிய உயிர்கொல்லி நோயாக மாறியுள்ள கொரோனாவின் காரணமாக பிள்ளைகளது கல்வி முதல் பெரியவர்களது வேலை வரை அனைத்தும் Online வழியே செயற்பட ஆரம்பித்ததன் விளைவாக, சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரின் கரங்களையும் செல்போன் மிக விரைவாகப் பற்றிக் கொண்டு விட்டது.

ஒரு காலத்தில் பாடசாலைக்கு மறைவாக போன் கொண்டு வரும் மாணவர்களை வகுப்பறையினை விட்டு துரத்திய காலம் போய்! இன்று செல்போனுக்குள்ளேயே வகுப்பறையும் கற்பித்தலும் நடத்த வேண்டிய பயங்கரம் உருவாகி விட்டது. Online Class, Zoom Class என்பவை ஆரம்பிக்கப் பட்டு இரண்டு வருடங்களுக்குள்ளாகவே, அதன் வழியே பாதிக்கப்பட்ட பெண் குழந்தைகள் மனநிலை பாதிக்கப்பட்டதும் தற்கொலை முயற்சிகள் மேற்கொண்டதும் நம் கண்முன்னால் அரங்கேறிக் கொண்டு இருந்தன. Zoom Class கொடூரங்களில் சில ஆசிரியர்களின் குரூர முகங்கள் வெளிப்பட்டு படிப்பினை வெறுத்த பெண் குழந்தைகளும் நம் மத்தியில் உள்ளனர்.

மிக அண்மையில் கூட நமது தினசரி செய்தித் தாள்களில் 'நேரில் பார்த்திராத செல்போன் காதலனை நம்பிச் சென்று கூட்டு வன்புணர்வுக்கு ஆளாகி பாதிக்கப்பட்ட சிறுமியின் செய்திகள்' இடம் பிடித்திருந்தமையும், இது போன்று தினசரிச் செய்தித் தாள்களின் பக்கங்களில் சிறிய கட்டமிட்ட செய்திகளாகவும், வெளியில் வராத ஏராளமான செய்திகளாகவும் பெண் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளுக்கு செல்போன் மிகப்பெரிய காரணியாக அமைந்துள்ளதனை சம்பந்தப்பட்ட பெண் குழந்தைகளின் பாதுகாப்புக்காக போராடி வருகின்ற சமூக அக்கறைமிகுந்தவர்கள் பல வழிகளிலும் வலியுறுத்திக் கொண்டே உள்ளனர்.

பெண்பிள்ளைகள் பற்றி ஏன் எழுத வேண்டி உள்ளது என்றால் இன்று ஆபத்துக்கு உள்ளாவது அதிகம் அவர்கள் தான்! ஆண்கள் சமுதாயம் அன்று முதல் இன்றுவரை ஒரே மாதிரியானதாகவே வளர்க்கப்பட்டு வருகின்றது! பாட்டி - தாய் - சகோதரி – தோழி – காதலி – மனைவி – மகள் என அனைத்து உறவுகளுடன் வளர்கின்ற ஆண்கள்! பெண்களை பாதுகாக்கின்றவர்களாக வளர்க்கப்பட வேண்டும்! அதனைச் செய்யத் தவறுகின்ற பெற்றோர்கள்! அதே ஆண் சமூகத்தால் தமது பெண் பிள்ளைகளும் ஆபத்துக்குள்ளாக நேரிடும் என்பதை உணர வேண்டும்.

குழந்தை பிறந்தது முதலே அவர்களது உடல் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை கொள்கின்ற பெற்றோர்! அவர்கள் வளர வளர குழந்தைகளது மனநலம் பற்றியும் அக்கறை கொள்ள வேண்டும். குழந்தைகள் யாருடன் அதிக நேரம் வெளியில் செல்கின்றனர்! குழந்தைகள் பதினைந்து வயது தாண்டியவுடன் அவர்களில் உண்டாகும் மாற்றங்களை அவதானிக்க வேண்டும். தாயோ, தந்தையோ அவர்களுடன் மிகுந்த நெருக்கமான உறவினை பேண வேண்டும், நட்பு ரீதியான உரையாடல்களை அடிக்கடி மேற்கொள்ள வேண்டும்.

ஆண் - பெண் உறவு நிலை தொடர்பான இடைவெளிகள் குறித்த விடயங்களை தெளிவுபடுத்த வேண்டும்! வீட்டிலும் சரி! பாடசாலை, அலுவலகம், வேலைத்தளம் எங்காயினும் சரி! பெண் என்பவள் வெறும் உடல் அல்ல! உணர்வுகள் கொண்ட ஒரு மனுஷி! நம் தாய்! சகோதரி! தோழி! குழந்தை! என்கின்ற மனோபாவம் ஆண்களுக்கு உண்டாதல் வேண்டும்!..

உலகளவில் இன்று பெண் பிள்ளைகளுக்கு எதிரான வக்கிரமான தாக்குதல்கள் பாரிய அளவில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. குடும்பங்களுக் குள்ளேயே பெண் குழந்தைகளுக்கு எதிரான வன்முறை நிகழ்ந்து கொண்டு இருக்கின்றது. இதனைத் தடுக்க வேண்டியது உண்மையான ஆண் மகனின் கடமை!

***'பெண்களை விட ஆண்களை பலமுள்ளவர்களாக இறைவன் படைத்தது! அவர்களை அடக்கி ஆள்வதற்கோ, பலவந்தப் படுத்துவதற்கோ அல்ல! அவர்களைப் பாதுகாப்பதற்காக'***


என்கின்ற உண்மையை அனைத்து ஆண் குழந்தைகளுக்கும் உணர்த்தி பெற்றோர் வளர்க்க வேண்டும். அது தான் நம் வீட்டிற்கும் முழு நாட்டிற்கும்! பாதுகாப்பு...



# நினைவில் நிலைத்த ஆட்களும் நாட்களும் - ஜனவரி மாதம்

| நாள் | பிறந்த ஆளுமையின் பெயர் | இறந்த ஆளுமையின் பெயர் | சிறப்பு தினம் |
|---|---|---|---|
| ஜனவரி 1 | | சி. வை. தாமோதரம்பிள்ளை (இ. 1901) | புத்தாண்டு |
| ஜனவரி 2 | | தி. வை. சதாசிவ பண்டாரத்தார் (இ. 1960) | |
| ஜனவரி 3 | | பொ. வே. சோமசுந்தரனார் (இ. 1972) | |
| ஜனவரி 4 | லூயிஸ் பிரெய்லி (பி.1809)<br>எஸ். எஸ். வாசன் (பி. 1903) | திருக்குறள் வீ. முனிசாமி (இ. 1994) | உலக பிரெய்லி தினம் |
| ஜனவரி 6 | | பிரமிள் (இ. 1997) | |
| ஜனவரி 7 | | வெ. சாமிநாத சர்மா (இ. 1978) | |
| | | சம்பந்தன் (இ. 1995) | |
| ஜனவரி 8 | ம. க. வேற்பிள்ளை (பி. 1847) | | |
| | ஏ. பெரியதம்பிப்பிள்ளை (பி. 1899) | | |
| ஜனவரி 9 | து. உருத்திரமூர்த்தி (பி. 1927) | பொ. அருணாசலம் (இ. 1924) | |
| ஜனவரி 10 | ஆர். சூடாமணி (பி. 1931) | ஆனந்தரங்கம் பிள்ளை (இ. 1761) | உலக ஹிந்தி தினம் |
| ஜனவரி 11 | | திருப்பூர் குமரன் (இ. 1932) | |
| | | நீலாவணன் (இ. 1975) | |
| ஜனவரி 12 | 1863 – சுவாமி விவேகானந்தர் | இரா. நெடுஞ்செழியன் (இ. 2000) | தேசிய இளைஞர் நாள் (இந்தியா) |
| | | முருகு சுந்தரம் (இ. 2007) | |
| | | ச. வே. சுப்பிரமணியன் (இ. 1917) | |
| ஜனவரி 13 | | கனகசபை சிவகுருநாதன் (இ. 2013) | |
| ஜனவரி 14 | கோ. நடேசய்யர் (பி. 1887) | எம். வி. வெங்கட்ராம் (இ. 2000) | |
| | க. வெள்ளைவாரணனார் (பி. 1917) | | |
| ஜனவரி 15 | | தேவநேயப் பாவாணர் (இ. 1981) | உலக மதத் தினம் |
| | | மீ. ப. சோமு (இ. 1999) | |
| ஜனவரி 17 | ம. கோ. இராமச்சந்திரன் (பி. 1917) | செ. இராசநாயகம் (இ. 1940) | |
| | | மு. மு. இஸ்மாயில் (இ. 2005) | |
| ஜனவரி 18 | அ. குமாரசாமிப் புலவர் (பி. 1854) | · ப. ஜீவானந்தம் (இ. 1963) | |
| ஜனவரி 19 | ஜி. சுப்பிரமணிய ஐயர் (பி. 1855) | | |
| | சீர்காழி கோவிந்தராஜன் (பி. 1933) | | |
| ஜனவரி 20 | சி. மூ. இராசமாணிக்கம் (பி. 1913) | ம. ப. பெரியசாமித்தூரன் (இ. 1987) | |
| ஜனவரி 21 | | சு. வித்தியானந்தன் (இ. 1989) | |
| | | எம். எஸ். உதயமூர்த்தி (இ. 2013) | |
| ஜனவரி 21 | | | விளாதிமிர் லெனின் – இ 1924 |
| ஜனவரி 22 | தி. வே. கோபாலையர் (பி. 1927) | சுவாமி ஞானப்பிரகாசர் (இ. 1947) | |
| சனவரி 23 | சுபாஸ் சந்திர போஸ் –பி 1897 | | |
| ஜனவரி 25 | பி. ஆர். ராஜமய்யர் (பி. 1872) | | |
| | பித்துக்குளி முருகதாஸ் (பி. 1920) | | |
| | செங்கை ஆழியான் (பி. 1941) | | |
| ஜனவரி 26 | ஓவியர் மணியம் (பி. 1924) | | இந்திய குடியரசு தினம்<br>சர்வதேசச் சுங்கத் தினம் |
| ஜனவரி 27 | கோமல் சுவாமிநாதன் (பி. 1935) | | |
| ஜனவரி 28 | | டொமினிக் ஜீவா (இ. 2021) | |
| ஜனவரி 30 | | மகாத்மா காந்தி (இ-1948)<br>இராமலிங்க அடிகள் (இ. 1874) | உலக தொழுநோய் ஒழிப்பு தினம் |
| ஜனவரி 31 | க. நா. சுப்ரமண்யம் (பி. 1912) | அகிலன் (இ. 1988) | |


சி.வை.தாமோதரம்பிள்ளை




எஸ்.எஸ்.வாசன்


லூயிஸ் பிரெய்லி


பிரமிள்


சம்பந்தன்


புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை


நீலாவணன்


பொன்னம்பலம் அருணாசலம்


ஆனந்தரங்கம் பிள்ளை


சூடாமணி


நீலாவணன்


முருகு சுந்தரம்


க.சிவகுருநாதன்

எம். வி. வெங்கட்ராம்




தேவநேயப் பாவாணர்


எம். ஜி. இராமச்சந்திரன்



டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன்


நீதியரசர் மு. மு. இஸ்மாயில்




எம்.எஸ்.உதயமூர்த்தி

சு. வித்தியானந்தன்


சுவாமி ஞானப்பிரகாசர்



சுவாமி விவேகானந்தர்


விளாடிமிர் லெனின்


சுபாஸ் சந்திரபோஸ்

பி. ஆர். ராஜமய்யர்


பித்துக்குளி முருகதாஸ்


செங்கை ஆழியான்



மகாத்மா காந்தி



இப்பகுதியில் ஒவ்வொரு மாதமும் நூலகங்களில் நாம் நினைவுகூரத்தக்க ஆளுமைகளின் பிறந்த, இறந்த தினங்களோடு, குறித்த மாதத்தில் இடம்பெறுகின்ற சர்வதேச தினங்களின் விபரங்களும் இடம்பெறும். ஆளுமைகள், சிறப்பு தினங்கள் குறித்த தகவல்களை நூல்கள் மற்றும் இணையத்தளங்களில் தேடிப் பெற்று வாசித்து இவற்றினை நினைவு கூர்வதோடு, ஏனையோரும் அறிந்திடச் செய்வோம்! "முன்னோரை போற்றுவோம்! முழுமை பெறுவோம்"